1538

1935 மலர் 12—இதழ் 1

வருஷ சந்தா ரூ 1-8-0

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு. கோதைநாயகி அம்மாள்.

OFFICE OF THE REGISTRAR ... MAR 1935 ... MADRAS

12-வது ஆண்டுப் பரிசுகளின் விவரம்

---

புதிய துப்பறியும் நாவல் ஆரம்பம்

## பொங்கிய காதல் : :

அல்லது

## மங்களபாரதி

---

1. குற்ற மறிதல் கற்றோர்க் கழகு.
2. மோச வலைக்குள் மாசற்ற கிள்ளை.
3. இன்ப நேசம், துன்ப விலாசம்.
4. சோதனை! சோதனை!! ஈசனின் சோதனை!!!

SC
...11, N2234
N35.121.
182972

...மோகினி" ஆபீஸ்
...தரடித் தெரு,
...லிக்கேணி, சென்னை

## பன்னிரண்டாவதாண்டுக்கொண்டாட்டம்
## 50 ரூபாய் பரிசுகள்.

1935ஞு பிப்ரவரிமீ 25உ க்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

முதல் பரிசு ரூ. 15. 10 ரூபாயில் இரண்டு பரிசுகள்.

5 ரூபாயில் மூன்று பரிசுகள்.

மேற்கண்ட பரிசுகள் புத்தகங்களாகவோ, சுத்தக் கதர் உடைகளாகவோ கொடுக்கப்படும்.

## பரிசுகளின் விவரம்.

இம்மாதம் 20-ந் தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு ந. | ரூ. | சந்தா ந. | |
|---|---|---|---|
| 1. | 25. | J. 53. | Mr. Jayavelu, Durban. |
| 2. | 15. | A. 241. | „ A. N. Ananthappa, Prome. |
| 3. | 10. | R. 503. | Sri, Rukmini Ammal, Chingleput. |
| 4. | 5. | M. 348. | Mr, M. S. Muthiah, Kandy. |
| 5. | 5. | A. 494. | „ V.M. K. Raman Cheitiar, Saigon. |
| 6. | 5. | S. 723. | „ N. R. Srinivasa Rao, Triplicane. |


இரண்டாம்

பதிப்பு

வெளிவந்து

விட்டது.

ஜெயஸஞ்சீவி

விலை

அணா நான்கு

நான்கு ரூபாய் பெறுமான

ருசியுள்ள துப்பறியும் நாவல்.

கண்ணைக் கவரும் சித்திரப் படங்களுடன் கூடிய

ஹாஸ்யக் கதைகள் அடங்கிய

பக்ஷிமாலிகா

அணா ஆறு தான்

# பொங்கலோ பொங்கல்!

"பால் பொங்கிற்று! சர்க்கரைப் பொங்கல் பொங்கிற்று?" என்று ஒருவரை யொருவர் ஸரஸமாக விசாரிக்கும் பொங்கல் பண்டிகை நடக்கும் மங்களகரமான தை மாதம்—கல்யாண மாதம்—பிறக்கப் போகின்றது. நமது மோகினிச் செல்விக்குப் பன்னிரண்டாம் ஆண்டு களிப்புடன் பிறந்துவிட்டது. புதிய (1935) வருடமும், மோகினிச் செல்வியின் பன்னிரண்டாவது வருடமும் நித்ய கல்யாண வைபோகமாக யாவரும் களிக்க வேண்டு மென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இம் முதல் பத்திரிகை மாத்திரந்தான் பழைய சந்தா நேயர்கள் எல்லோருக்கும் அனுப்பப்படும். இரண்டாவது பத்திரிகை முதல் பன்னிரண்டாவதாண்டுச் சந்தாவைச் செலுத்திய நேயர்களுக்கு மாத்திரந்தான் அனுப்பப்படு மென்பதை அன்பர்கள் தயவு செய்து கவனிக்க வேண்டுகிறோம். அனாவசியமான செலவில் நாம் வி. பி. யில் அனுப்பும் வழக்கம் கிடையாதென்பது நண்பர்கள் அறிந்த விஷயமாதலால் அவர்கள் மனமிரங்கி தமது சந்தாவையும், தமது சினேகிதர்களுக்குச் சிபார்சு செய்து அவர்களின் சந்தாவையும் அனுப்பி எமக்கு உத்ஸாகமும், ஊக்கமும் கொடுத்து ஆதரிக்க வேண்டுமோகக் கோருகிறேன்.

## 1935-ம் ஆண்டு—புதிய நாவல்

சென்ற ஆண்டு கடைசிக்குள் ஒரு தனி நாவல் தயாரிக்க எண்ணியும், தேசீய விஷயமான வேலைகள் இடைவிடா திருந்ததால் குறித்த காலத்தில் அது முடிவடையாது போய் விட்டது. எனினும் கூடிய சீக்கிரத்தில் (அநேகமாக அடுத்த இதழுக்குள்) "பட்டமோ! பட்டம்!" என்கிற சிறிய நாவலை வெளியிட உத்தேசித்திருக்கிறேன். அதன் விலை எட்டணு தான். அதன் விலையையும் சந்தாவுடன் சேர்த்தனுப்பினல் நேயர்களுக்கு அனாவசியமான தபாற் செலவு பின்னர் ஏற்படாதிருக்கும் என்பதைக் கவனிக்கக் கோருகிறேன்.

தங்கள் சகோதரி

1-1-1935.] வை. மு. கோதைநாயகி.

# முக்கிய அறிவிப்பு

இது வரையில் ஒவ்வொரு ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது சஞ்சிகையை வெளியிட்டு வந்தோம். அதன்படி ஒரு மாதத்திய சஞ்சிகை அடுத்த மாத முதலில்தான் சந்தா நேயர்களின் கைக்குச் சேரும். இதனால் அனேகருக்குக் கலவர மேற்படுவதால் இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு மாதச் சஞ்சிகையையும் அந்தந்த ஆங்கில மாத முதல்,தேதியன்றே வெளியிடத் தீர்மானித்துள்ளோம். மேலும், இது வரையில் நமது ஆண்டு, டிசம்பரில் ஆரம்பமாகி நவம்பரில் முடிவடைந்திருந்ததை இப்பொழுது மாற்றி 1935ஆ ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகி இந்த வருஷ டிசம்பரிலேயே முடியும் படியும் ஏற்பாடு செய்துள்ளோம். ஏற்கெனவே புது ஆண்டுச் சந்தா செலுத்தியவர்கள் (1934 ஆ டிசம்பர் முதல் 1935 ஆ நவம்பர் வரையில் என்று ரசீது பெற்றிருப்பினும்) 1935 வருஷக் கடைசி வரையில் (12-வது ஆண்டு) சந்தாதாரர்களாகக் கருதப் படுவார்களென்பதைத் தெரிவிக்கின்றோம்.

## செய்கோன் சந்தா நேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

செய்கோனிலும், அதைச் சேர்ந்த இதர நாடுகளிலுமுள்ள நமது அன்பர்கள் இனி நமக்கு நேரே சந்தா அனுப்பவேணுமென்ற சிரமமில்லை. அடியிற்கண்ட நமது நண்பரிடம் தங்கள் சந்தாவையும், தங்களது நேயர்களின் சந்தாவையும் சேர்த்துக் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளும்படி கோருகிறோம்: நமது நாவல்கள் எல்லாம் அவரிடம் கிடைக்கும்.

Mr. C. NAGAYYA.
No. 114, Rue Pellerin.
SAIGON.

சிங்கப்பூர், குலாலம்பூர். நேடால் முதலிய இடங்களிலுள்ள அன்பர்கள் கீழ்க்கண்டவர்களிடம் நமது சஞ்சிகையையும், நாவல்களையும் பெற்றுக் கொள்ளலாம்:

**SINGAPORE.**
M. Mohamed Dulfakir & Co.,
34, North Bridge Road.

**KUALA LUMPUR.**
Mr. P. Sivaguru,
50, Brickfields Road.

**NATAL.**
Mr. K. Marimuthu
c/o Lamercy Sugar Mills,
Lamercy, P. O.

# பன்னிரண்டாவதாண்டு

**1934௵ ஜனவரி மாதத்தில் பிறந்து விட்டது.**

வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதிய
மங்களபாரதி
எனும் துப்பறியும்
நாவல்
ஆரம்பமாகிறது.

## — ஜகன்மோகினி —

மாதாந்த
நாவல்
சஞ்சிகை

| | |
|---|---|
| வருஷ சந்தா<br>ரூ. 1—8—0. | தனிப் பிரதி<br>அணா இரண்டு. |

நமது சஞ்சிகைக்குப் புதிய சந்தா நேயர்களைச் சேர்த்து, முன்பண மனுப்புவோருக்கு அடியிற் கண்டபடி ஒரு வருஷ சஞ்சிகையும், மறு பக்கத்தில் கண்டபடி நாவல்களும் இனமாக அனுப்பப்படும்.

மூன்று புதிய சந்தாதாரர்களைச்
சேர்த்து முன் பணம்
அனுப்புவோருக்கு

## ஒரு வருஷ சஞ்சிகை இனம்.

இப்பொழுது சந்தாதாரராக இருப்பின் அவர்களுக்கு அடுத்த ஆண்டு முழுதும் சஞ்சிகை இனமாக அனுப்பப்படும், அல்லது அவர்களுக்கு வேண்டிய நாவல் அனுப்பப்படும்.

# முற்றிலும் இனாமாக நாவல்கள் வேண்டுமா?

ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து முன்பண மனுப்புவோருக்கு இந்த நான்கில் ஒன்று இனாம்

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்

2 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு இந்த நான்கில் ஒன்று இனாம்

பரிமளகேசவன்
உத்தமசீலன்
கதம்பமாலை
சுகந்தபுஷ்பம்

3 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்புவோருக்கு இந்த நான்கில் ஒன்று இனாம்

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
சோதனையின் கொடுமை

4 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு இந்த மூன்றில் ஒன்று இனாம்

நவநீதகிருஷ்ணன்
சாமளநாதன்
ருக்மிணீகாந்தன்

5 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு இந்த ஐந்தில் ஒன்று இனாம்

வைதேகி
பத்மசுந்தரன்
ராதாமணி
சாருலோசனை
காதலின் கனி

“ஜகன்மோகினி” ஆபீஸ், திருவல்லிக்கேணி.

ஸ்ரீ




7-MAR 193

## முதல் அதிகாரம்.

### குற்ற மறிதல் கற்றோர்க் கழகு

182972

"உலகமே ஆண்டவனின் ஆட்சியில் அடங்கி இருக்கிறதென்றால், ஆண்டவனின் அளவிலா மகிமைக்குக் கரை காண முடியுமா! இல்லை; இல்லை: கரை என்பதே இல்லாத கடலும் அவனே: முடிவிலாத பூதலமும் அவனே: எல்லை இல்லாத ஆகாயத்திரையும் அவனே: எண்ணிக்கையற்ற நக்ஷத்திரக் கூட்டங்களும் அவனது லீலையே: ஓய்வற்றுப் பிரகாசிக்கும் சூர்ய சந்திராதியரின் தேஜோமயமான ஒளியும் அவனுடைய ஒளியே: உலகத்திலுள்ள சகலமும் என்னப்பனின் லீலா விநோத கோலாகலங்களே யாகும். என்ன அற்புதமான அந்தி வேளை. வானத்தில் ஓர் பாகம் உருக்கி வார்த்த தங்கத்தைப் பழிப்

பது போன்றும், மற்றோர் பாகம் வெள்ளியை நிகர்த்த துல்லிய பிரகாசத்துடனும் மக்களின் மனத்தை பரவசமுறச் செய்கின்றது." என்று இயற்கை வனப்பைக் கண்டு மனங் களித்தவாறு ஒரு வாலிப சிங்கம் உட்கார்ந்திருந்தான். அந்த இடத்தில் நாகரிக தடபுடலான சிங்காரத் தோட்டங்கள் எதுவும் இல்லை. மாட மாளிகையின் அற்புத விலாசங்கள் எதுவுமில்லை. சாதாரணமான ஏழை மக்கள் வாஸம் செய்யும் சிறு குடிசைகள் நிறைந்த ஓர் சிறு கிராமத்தின் மாந்தோப்பு தான். அதில் ஒரு கருங்கல்லின் மீது அவன் உட்கார்ந்திருந்தான்.

அந்த இளவலைப் பார்த்தவுடனே அவனுடைய உயர்ந்த பெருந்தன்மையும், சாந்த குணத்தின் அமைப்பும், வீர தீர பராக் கிரமமும், கருணையும் பொலிந்த கண்ணொளியின் காம்பீரமான பார் வையும் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய பார யோசனையுடைய சுத்த வீரன் என்பதை அவனது தோற்றமே தெற்றென விளக்கிக் காட் டியது. அப்படி சற்று நேரம் உட்கார்ந்திருக்கையில் அவன் வீற் றிருக்கும் திக்கிற்கு எதிர்ப்புறமாக சிறிது தூரத்திலிருந்து இனி மையான தேவகானம் போன்ற அற்புதமான கானத்தின் இன் னிசை மதுரமாகக் கேட்டது.

அந்த மதுரகானம் சாமான்யமான பாட்டாக இராமல் கடவுளைக் குறித்துத் தோத்திரம் செய்யும் கானம், அம்ருதமென இனிக் கும் தொனியில் சில யுவதிகள் சேர்ந்து பாடுவது போலக் கேட்டது. மனம் பூரித்த இளவல் உடனே அவ்விடத்தை விட்டு எழுந்து அந்த மதுரகானம் வருமிடத்திற்குச் சென்றான். அவ்விடம் சுமார் இவ னிருக்கு மிடத்திற்கு அரை பர்லாங்கு தூரமிருந்தது. நாற்புறமும் இரும்பு வேலிகள் கட்டிய காம்பவுண்டிற்குள் ஓர் மாளிகையும் அதைச் சுற்றி பலவகைப்பட்ட காய் கறிகள் செடிகளும், கனி வகைகள் தரும் மரங்களும், கொடிகளும், புஷ்ப ஜாதிகளின் கதம்ப மணம் வீசும் செடிகளும் நிறைந்திருந்தன. அதன் மத்தியில் ஒரு சிறிய ஆசனம் அமைக்கப் பட்டிருந்தது.

வெளிப் புறத்திலுள்ள பிரம்மாண்டமான இரும்பு கேட்டுகள் சாத்தப்பட் டிருந்தன. அந்த வாலிபன் கேட்டினருகில் சென்று

அங்கு மாட்டப் பட்டிருந்த (போர்டு) பலகையைப் பார்த்தான். அதில் பெரிய எழுத்துக்களில் "ஏழைப் பெண்களின் வித்யாலயம்." என்று வரையப் பட்டிருந்தது கண்டு சந்தோஷத்துடன் அம் மதுர கானத்தைக் கேட்டுக்கொண்டே நின்றான். சில நிமிடங்களுக்குப் பிறகு அந்த கானம் நின்றுவிட்டது.

அப்போது நன்றாக இருட்டிவிட்டபடியால் எங்கும் வெளிச்சம் சிறிது மின்றி இருள் கப்பிக் கொண்டுவிட்டது. அந்த கட்டிடத்தின் உள்ளிருந்து மணி யடிக்கும் ஓசை கேட்டது. உடனே கம் மென்று சாம்பிராணிப் புகை வாசனை வந்தது. பின்னும் சிறிது நேரத்திற் கெல்லாம் தட்டுக்கள், லோட்டாக்கள் ஓசை கேட்டன. இதிலிருந்து பூஜை நைவேத்தியம் எல்லாம் முடிந்ததும், எல்லோரும் சாப்பாட்டிற்குச் செல்வதாகத் தெரிந்துகொண்டான். இதற்கு மேலும் இங்கிருப்பதில் உபயோக மில்லை என்று எண்ணிய வாலிபன் தன் வீட்டிற்கு வந்துவிட்டான்.

அச் சிறிய சிற்றூர் அவனுடைய பூர்வீகமான கிராமம். தற்போது அவனுடைய தாதா, பாட்டி, மாமன் முதலியவர்கள் தான் அங்கு இருக்கிறார்கள். உத்யோக நிமித்தம் அவன் பிதா வெளியூரிலிருக்கிறார். அவனுக்கு பெற்ற தாயார் கிடையாது; சிறு பிராயத்திலேயே கால கதி யடைந்துவிட்டதால் தாதாவும் பாட்டியுமே அவனை வளர்த்து ஓர் நிலைமைக்குக் கொண்டு வந்தார்கள். தகப்பனாரிடம் அவன் இருந்ததே கிடையாது. எப்போதேனும் ஒரு முறை செல்வதுண்டு.

அவனுடைய உயர்தரப் படிப்பின் நிமித்தம் அவன் இச் சித்தூரிலிருந்து சென்று பட்டின வாஸம் செய்ய நேர்ந்தது. ஆகையினால் வருடத்திற்கு ஒரு முறை அல்லது இரு முறைதான் அவன் சித்தூருக்கு வருவதாயிற்று. அவனுக்கு பந்தாட்டத்தில் அபாரமான திறமை யுண்டு. எந்த இடத்தில் பந்தாட்டப் பந்தயம் நடப்பினும் அவனைத் தேர்ந்தெடுக்காமல் ஆடமாட்டார்கள். ஆட்டத்தில் எத்தனையோ கப்புகள், மெடல்கள் முதலியன கணக்கற்றவைகள் பரிசு பெற்றிருக்கிறான். பந்தாட்ட வீரன் என்ற ஓர் பெரிய பட்டம்

அவனுக்கு வழங்கப்பட்டது. பந்தாட்டத்திற்கு இவ்வாலிப வீரன் வருகிறுன் என்று தெரிந்தால் ஆயிரக் கணக்காக கூட்டம் நிரம்பி விடும்; எள் விழ இடமிருக்காது. ஒவ்வொரு பந்தாட்டத்திலும் இவன் பெயர் இருக்கிறதா என்பதை ஜனங்கள் ஆவலுடன் எதிர் பார்ப்பார்கள். அத்தகைய உயர்தர விளையாட்டுக்காரனுகிய இவ் வாலிபனைப் போற்ருதார் கிடையாது. இவனைப் பார்ப்பதற்கே நான், நீ என்று ஜனங்கள் போட்டி யிட்டுக்கொண்டு ஓடி வந்து, மேல் விழு வார்கள். இவனுடைய புகைப் படத்தை ஒவ்வொரு பந்தாட்டப் பிரியர்களின் வீட்டிலும் காணலாம்.

இவனுக்குள்ள சகலமான உயர்தர குணங்களுக்கும் சிகரம் வைத்தது போல வசீகரத்தன்மையும், சாந்தமும் குடி கொண்டிருந் தன. இவனுடைய புகழைக் கேட்கக் கேட்க அவன் தாதாவும் பாட் டியும் மனம் பூரிப்பார்கள். தமது மகள் இருந்து இந்த பெருமையை அனுபவிக்க வில்லையே என்று வருத்தப் படுவார்கள். இந்த பட்டிக் காட்டிற்கு அவன் லீவுக்கு வந்திருக்கையில் கூட அவனைத் தேடிக் கொண்டு அனேகர் பார்க்க வந்துவிடுவார்கள்.

சித்தூர் என்பது சிறிய கிராமமாக விருந்தபோதிலும் அதி லுள்ள சுமார் 30 வீட்டுக்காரர்கள் நல்ல செல்வமும் செல்வாக்கும் கண்ணியமும் பெற்றவர்கள். ஏராளமான சொத்துடையவர்கள்; எனினும் டாம்பீகம், படாடோபம் எதுவும் இல்லாமல் வெகு சாதாரணமான நிலைமையில் ஏழைகளை விட ஏழைகள் போல இருப் பார்கள். ஏழைகளிடத்தில் அளவற்ற மதிப்பும், அன்பும் கொண்ட வர்கள். அவர்களுடைய பண்ணையாட்களில் பெரும்பாலோரும் மாடு கன்றுகளுடன் வாழ்பவர்கள் என்ருல் முதலாளிகளின் செல்வத் தைக் கூறவேண்டுமா? பார்ப்பதற் கென்னவோ பரம ஏழைகளைப் போலவே காணப்படுவார்கள்.

இந்த முப்பது வீட்டுக்காரர்களில் இவனுடைய பாட்டனும் ஒருவரல்ல. அவ்வூர் மணியக்காரரிடம் கணக்கு வழக்கு பார்க்கும் ஓர் சிறிய வேலையி லிருப்பவர். அவருக்குப் பிதிரார்ஜிதமாக உள்ள நிலங்கள் கொஞ்சம் இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு

சுகமாகக் காலங் கழிப்பவர். மேல வீதி என்ற வீதியிலுள்ள செல்வ வந்தர்களின் வீடுகள் சாதாரண மாடி வீடுகளாக உள்ளன. கீழ வீதியில் மத்திம வருமான முள்ளவர்கள் வசிக்கும் மிகச் சாதர்ரண ஓட்டு வீடுகளும். கோடித் தெருவில் மற்ற பண்ணையாள்கள் முதலிய தொழிலாளிகள் வசிக்கும் குடிசைகளும் இருக்கின்றன. ஒரு கோடியில் ஹரிஜனச் சேரிகளும், மற்றொரு கோடியில் வில்லி குடிசைகளும் ஊருக்குப் பாரா கொடுக்கும் காப்பாளர்கள் போல அமர்ந்திருந்தன.

நமது இளஞ் சிங்கம் இந்த கிராமத்திற்கு வந்தால் குடிசைகள் நிறைந்த இடத்தில்தான் சதா வசிப்பான். அவர்களுடன் பேசுவதும், அவர்களின் தொழில்களைக் கண்டு வியப்புறுவதும் அவர்களின் எளிய வாழ்க்கையில் மனமகிழ்வதும், சிறு குடிசைக்குள் பெருங் குடித்தனம் செய்யும் விநோதங்களைப் பார்ப்பதும் சிறிய பிள்ளைகள் முதல் ஏதோ ஒரு வேலையைச் செய்யும் அழகைக் கவனிப்பதும் அவனுக்கு மிக மிக ப்ரீதி. அதற்காகவே சாப்பாட்டிற்கு முன்னும் பின்னும் குடிசைத் தெருவில் இருப்பான். அங்கு சிறிய தோட்டங்களும், கவலை, ஏற்றம் முதலியன அடங்கிய நீர்ப்பாசனக் கிணறுகளும் இருக்கின்றன. அவைகளைப் பார்த்துக்கொண்டு அங்கேயே சந்தோஷமாக விருப்பான். அக் குடிசை வாசிகளுக்கோ இவனுடைய புகழும் கீர்த்தியும் அபாரமாக நாளுக்கு நாள் விருத்தியாவதைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியுண்டாவதோடு அத்தகைய வீரன் தங்களிடம் அன்பு கொண்டிருப்பதைக் கண்டு கட்டு மீறிப் பூரிப்பு உண்டாகியது.

அத்தகைய சுத்த வீரனின் முகத்தில் மட்டும் ஏதோ ஒரு விதமான விசனம் குடி கொண்டிருந்தது. இதை அவன் பாட்டனுர் முதலியவர்கள் அறியவில்லை. அவன் கானத்தின் இனிமையைக் கேட்டுவிட்டு வீட்டிற்கு வந்தான். இவனுக்காக இவனுடைய மாமனும், பாட்டனும் போஜனத்திற்கு எதிர் நோக்கிக்கொண்டிருந்ததால் அவர்களோடு சாப்பிட உட்கார்ந்தான். தன் பாட்டனை நோக்கி "தாதா! டாக்டர் சதாசிவம் பிள்ளை இருந்த பங்களாவில் இப்போது

அவர் இல்லையா என்ன? வேறு ஏதோ போர்டு போட்டிருக்கிறதே?" என்று கேட்டான்.

அதற்குக் கிழவர் "அவருக்கு அந்த இடம் போதவில்லையென்று அதற்கும் அப்பால் பெரிய கட்டிடம் கட்டிக்கொண்டு போய் விட்டார். நீ இப்பக்கம் வந்து சுமார் ஒரு வருடமாகிறதல்லவா! இவ்வூரில் பாலாம்பாள் அம்மாள் இருந்தார்களே! அவர்கள் தன்னுடைய ஏராளமான செல்வங்களைச் சிலரைப்போல சின்ன பின்னமாகச் சிதறவடிக்கவில்லை. ஸ்வீகாரம் என்று ஒரு ஊர்ச்சனியை விலைக்கு வாங்கி உபத்திரவப்படவில்லை. அபிமானமாயும் யாரையும் வைத்துக்கொள்ளவில்லை. தன் மனத்திருப்தியான வழியில் செலவிட வேண்டுமென்று வெகு நாட்களாக எதிர்பார்த்திருந்தார்கள்.

அந்த அம்மாள் தேச யாத்திரை செய்து வந்த போது ஆங்காங்கே பல ஊர்களிலுள்ள அதிசயங்களை எல்லாம் பார்வையிட்டுக் கொண்டே வந்தார்கள் பூனுவில் உள்ள சேவ சாதனத்தைப் பார்த்ததும் அந்த அம்மாளின் வியப்பிற்கு எல்லையே இல்லை. எத்தனை அழகாக, ஒழுங்காக, பக்ஷபாதமின்றி சகல மத, ஜாதி ஏழைப் பெண்கள் எல்லாம் ஒன்ருகச் சேர்ந்து கல்வி, கைத்தொழில், சங்கீதம், வீட்டு வேலைகள், மருத்துவத் தொழில்கள், முதலிய சகல வேலைகளையும் வகுப்பு வகுப்பாகப் பிரித்துச் செய்யும் அற்புதமும் அதை நடத்துவிக்கும் சாமர்த்தியமும் அந்த அம்மாளின் மனத்தை மாற்றிவிட்டன. அவைகளை நன்ருகப் பார்த்துக் கொண்டு வந்தார்கள்.

சென்னையிலுள்ள சாரதா வித்யாலயத்தையும் பார்வையிட்டார்களாம். அங்கும் ஏழை மாணவிகளுக்குப் பெரும் ஆதரவளித்து உன்னதமான உத்தம முறைகளில் அவர்களுக்குப் பலவித உபயோகமான கல்விகள், கைத்தொழில்கள் முதலியன போதிக்கும் அழகும், ஆற்றலும் அந்த அம்மாளை மீண்டும் கவர்ந்தன. அவ்விடத்திலேயே இதர செல்வவந்தர்களின் குழந்தைகளும் வந்து கல்வி பயின்று செல்வதும், போதகாசிரியர்களின் நுண்ணிய மதியும், போதிக்கும் விமரிசையும் அதிகாரிகளின் மேற் பார்வையின்

கண்ணியமும் வித்யாலயத்தின் உயரிய நோக்கங்களும் விதிகளும், (ரூல்கள்) பாலம்மாளே முற்றிலுமே மாற்றிவிட்டன.

அதோடு சென்னையிலேயே யுள்ள விதவைப் பெண்களின் வித்யாலம் அந்த அம்மாளின் மனத்தை உருக்கியது. இத்தனை அருமையான காரியத்தைச் செய்து பரிமளிக்க வைத்த—ஏழை மக்களின் அறிவைப் பிரகாசிக்க வைத்த, விசனங்களே மறைய வைத்த—சகோதரி சுபலக்ஷ்மி அம்மாளின் திறமையைக் கொண்டாடிப் போற்றினர்கள். இதே போன்று எங்கெங்கே இடத்தில் இம்மாதிரியான ஆசிரமங்கள் இருக்கின்றன வென்பதையே அம்மாள் ஆராய்ச்சி செய்து அங்கெல்லாம் சென்று நேராகப் பார்த்து அதனதன் விதிகளைச் செவ்வனே கற்றுக் கொண்டார்கள்.

யாத்திரை முடிந்து அம்மாள் இங்கு வந்த அன்று நாங்கள் எல்லோரும் விசாரிக்கச் சென்ருேம். அம்மாளின் மாறுதலே முற்றும் அறிந்தோம். அன்று முதல் பலவிதமான பிரயாசைகள் பட்டுத் தானும் தனது ஏராளமான செல்வத்தினல் ஓர் வித்யாலயம் நிலவ வேண்டும் என்ற பெரும் ஆவல் உண்டாகி விட்டதால் அதற்கான முயற்சிகளேச் செய்து சரியான ஆட்களின் உதவியைப் பிடித்து தன் மனச்சந்துட்டியுடன் ஓர் வித்யாலயத்தை நிர்மாணித்து விட்டார்கள். அதற்கு அவர்களே ஆங்காங்கு சென்று நல்ல உபாத்தியாயர்களேத் தேடிக் கொணர்ந்து நியமித்துவிட்டார்கள்.

இந்த பக்கத்தில் எங்கும் இந்த மாதிரியான ஆசிரமமே கிடையாதாகையினல் வெளியூர்களிலிருந்து அனேக ஏழை மாணவிகள், தாயற்றவர்கள், அனதைகள் முதலிய பலவிதப்பட்டவர்கள் இங்கேயே வாசிப்பதற்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். இந்த அம்மாளும் தன் வாசத்தை அந்த ஆசிரமத்திலேயே மாற்றிக்கொண்டு சந்தோஷமாக விருக்கிருர்கள். இவ்வாச்ரமம் ஆரம்பித்து ஆறு மாதங்களாகின்றன. இதற்குள் சுமார் 50 மாணவிகள் இங்கேயே இருந்து படிக்கிறவர்களாயும், 100 பேர்கள் வந்து படித்துவிட்டுப் போகிறவர்களாயும் சேர்ந்திருக்கிருர்கள். 50 மாணவிகளில் 15 பேர்களுக்கு அரை சார்ஜு வாங்குகிருர்கள்; மற்றவர்களுக்கு ஆசிரமத்திலிருந்தே

கொடுக்கிறார்கள். வெகு அழகாயும், ஒழுங்காயும், கண்டிப்பான முறையிலும் பழக்குகிறார்கள். ஏன் தம்பி! நீ அங்கு சென்றிருந்தாயா என்ன?'' என்று சொன்னார்.

வாலி:—ஒகோ! இவைகளெல்லாம் எனக்குத் தெரியாது. தேவகானம் போலத் திடீரென்று ஓர் கான மழை பொழிந்தது. "இத்தகைய கானம் நம் சிற்றூரில் ஏது?'' என்று பிரமித்து, அது வந்த வழியில் சென்று கவனித்தபோது போர்டைப் பார்த்தேன். அதனால் கேட்டேன்.

இதற்குள் போஜனம் முடிவடைந்தது. எல்லோரும் எழுந்து சென்றுவிட்டார்கள். நமது இளவல் சற்று நேரம் பாட்டனாருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு படுக்கைக்குச் சென்றான். ஏதோ புத்தகத்தை வைத்துக்கொண்டு புரட்டினான். புத்தி அவ் வகையிலும் செல்லவில்லை. "சீச்சீ! நீ செய்தது தவறு. உன் விளையாட்டு மூலமாகவே நீ மாபெருந் தவறிழைத்துவிட்டாய்.'' என்று இவன் மனத்தில் விநாடிக்கு விநாடி யாரோ குத்திச் சொல்வது போலவிருக்கிறது. அவ்வாறான எண்ணங்கள் உண்டாகும் போதெல்லாம் திடும், திடும் என்று நடுக்கலுற்று ஆடுகின்றது. தலை சுழலுகின்றது. குபீர் என்று வெயர்வை வெள்ளம் வழிகின்றது.

"ஆம், நான் என்னை மீறி அனியாயந்தான் செய்து விட்டேன். வேண்டுமென்று நான் என் மனச்சாட்சியுடன் செய்ததல்ல. விளையாட்டின் உற்சாகத்தில் என்னை மீறிய ஆவேசத்துடன் பந்தை வீசி எறிந்தேன்; அது பெரிய விபத்தாகிவிட்டதே! இது வரையில் நான் பந்தாடிய காலத்தில் இம்மாதிரி யாருக்கும் பலத்த காயம் பட்டு ஆபத்து நேர்ந்ததில்லையே. ஏதோ சிலருக்கு அடி பட்டதுண்டு. சிலருக்கு ரத்தம் வந்ததுண்டு. இம்மாதிரி பலமாகி நான் பார்த்ததே இல்லையே! சீச்சீ! நான் இந்த ஆட்டத்தில் ஜெயித்து கப்பு வாங்கிவிட்ட போதிலும் அன்று நடந்த அக்காட்சி என் கண் முன்பே தாண்டவமாடுகின்றது. என் மனக் கண்ணை விட்டு எத்தனை தரம் தள்ளினாலும் போகவில்லையே. நான் சற்றும் உணர்ச்சியற்ற தன்னலத்தன்மையுடன் வந்துவிட்டது பெருந்தவறல்லவா!



ஆம். என் பாட்டியாருக்கு உடம்பு அதிக மென்கிற தந்தியே என்னை இங்கு இழுத்துவிட்டது. பாட்டிக்கு இனி பயமில்லை. நாம் இங்கு செய்வது ஒன்றுமில்லை. ஆகையினால் நாளையே புறப்பட்டு வாணீபுரம் செல்ல வேண்டும். இவ்வித மன சஞ்சலத்துடன் இருப்பது கூடாது. நான் நேரில் சென்று பார்க்காவிடில் என் மனம் சாந்த மடையாது. ஆகையினால் நாளையே கட்டாயம் போக வேண்டும்.'' என்று தீர்மானித்துக் கொண்டான்.

இரவு முற்றும் ஏதேதோ எண்ணியபடியே புரண்டுகொண்டிருந்தான். விடியற்காலம் எழுந்து, தன் பாட்டனாரிடம் தனக்கு வாணீபுரத்தில் முக்கியமான வேலை இருப்பதாயும், அவசியம் போக வேண்டுமென்றும் கூறினான். இவன் பெரிய (கிரிக்கெட் சாம்பியன்) பந்தாட்ட வீரனாகையினால் ஏதோ முக்கியமான வேலை இது விஷய

மாக இருக்கலாம் என்று எண்ணி அவர் உத்திரவு கொடுத்து விட்டார். அப்பொழுதே நமது இளவல் வாணீபுரத்திற்குப் புறப் பட்டுவிட்டான்.

சாயங்காலம் சுமார் 5 மணிக்கு வண்டி வந்து சேர்ந்தது. நேராக தான் உத்தேசித்த இடத்திற்குச் சென்ருன். அந்த வீடு மிகவும் சிறிய வீடு; வாடகைக்கு இருக்குமிட மாகையிஞல் அதில் ஒரு பாகத்தில்தான் இவன் நாடிச் சென்றவர்கள் இருக்கிருர்கள். நமது வாலிபன் "எப்படி யிருக்கிறதோ! என்னவா யிருக்கிறதோ?" என்ற பெருங் கவலையுடன் உள்ளே சென்ருன்.

அந்த சிறிய அறையில் ஒரு கட்டிலின் மீது ஒரு வாலிபன் தலையில் பெரிய கட்டுடன் படுத்திருந்தான். அவனருகில் அழகே உருக்கொண்ட அங்கனமணி கவலை நிறைந்த முகத்தோடு, படுத்திருக்கும் வாலிபனின் தலையில் ஐஸ் வைத்து சிகிச்சை செய்து கொண்டிருந்தாள். அவனுடைய தாயார் வயதான கிழவி பக்கத் தறையிலிருந்து வெகு விசனமும் ஆத்திரமுங் கொண்டு, "அடேய் மணீ! இந்த எழவெடுத்த ஆட்டம் வேண்டாமென்று முட்டிக் கொண்டேனே, கேட்டாயா? எந்தப் பாவி மகனே, படுபாவி மகனே என் வயிற்றில் கல்லைப் போட்டது போல உன் தலையை உடைத்து விட்டானே! இந்த ஆட்டத்தின் தலையில் இடி விழ. பிராணனுக்கு உலையாக விருக்கும் இவ்வாட்டத்திற்கு எத்தனை துள்ளல், எத்தனை குறிப்பு, எத்தனை தடபுடல்! எல்லோருடைய தலைகளும் தலை கீழாய் ஆடி விழுகின்றன! முட்டிக்கால் உடைவதும், மாரில் பட்டு எலும் புடைவதும், மண்டை உடைவதுமான இந்த ஆட்டத்தின் அமர்க் களத்தை எந்த புண்ணியவான்தான் கண்டு பிடித்தானே?

இந்த ஆபத்தான ஆட்டத்திற்கு ஆயிரமாயிரமான கூட்டமும், பணச் செலவும், கப்புகள் பரிசும் என்ன வேண்டி இருக்கிறது? அவ ரவர்கள் அனுபவித்தால்தானே தெரியும். எத்தனை பெயர்களின் மண்டை யுடைந்ததோ, கை கால் மொண்டியாயிற்றே; என்ன எழவோ: யாருக்குத் தெரியும்! என் மனம் நான்கு நாட்களாக தத்த ளிக்கின்றது. எவனே படுபாவி என் குலத்திற்குச் சத்துருவாக

வந்து சேர்ந்தான்.'' என்று சரமாரியாகத் தன் விசனத்தை எல்லாம் இன்னொரு அம்மாளிடம் கூறிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

அதற்கு அந்த அம்மாள், "ஐயோ! அனியாயமே! இப்படியுமா ஒரு எழவெடுத்த ஆட்டமிருக்கும். குழந்தை கண்ணைத் திறந்து எத்தனை நாளாயிற்று. அவன் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் பயங்கரமாக இருக்கிறதே: உம். அலமேலு! அழாதே; என்ன செய்வது? எந்த சண்டாளனோ உனக்கு எமனாக வந்தான். அவன் நாசமாப் போக. அவன் எழவெடுக்க. அவன் ஆட்டத்திலே கொள்ளி வைக்க. அவன் நிர்மூலமாப் போக." என்று வாயார வசைமாரியைப் பொழிந்து கையை நுறுக்குகின்றாள்.

இந்த இரு அம்மாமார்களின் அரிய வார்த்தைகள் முற்றும் நமது இளவலின் காதில் சுறுக்கென்று நெருப்பு போல் விழுந்தன. அவன் ஏற்கெனவே துயரப்பட்டுக் கொண்டிருந்ததற்கு அனுகூலமாக புண்ணில் கோலிடுவதுபோலான வேதனையை உண்டாக்கியது. அவன் இருதயம் பட்ட பாட்டை கூறவே முடியாது; வெடித்து விடும் போலாய்விட்டது. தான் வேண்டுமென்று செய்யாத காரியமாயினும் தன்னால் இத்தகைய துன்பம் வந்துவிட்டதை எண்ணி வருந்தாமலிருக்க முடியவில்லை. இவர்கள் திட்டுவது முற்றும் தனக்குப் பொருத்தமானதுதான் என்று வருந்தினான்.

அச்சமயம் ஒருவன் வேகமாக உள்ளே ஓடி வந்து "அம்மா! டாக்டர் வீட்டிற்குச் சென்றேன். அவர் மகா கர்மி. பசையற்ற கட்டை. நிர்த்தாக்ஷண்யமாக "பணத்தை வைத்தாலொழிய வர முடியாது" என்று கூறிவிட்டார். வேறு ஒருவரிடம் சென்றேன். அவர் வீட்டிலில்லை. மறுபடியும் முன் சொன்னவரிடம் சென்று "ஐயா! ஏழை, எளியவர் என்கிற பச்சாத்தாபமில்லையா! அதிலும் அவன் என்ன சாமானிய மனிதனா பந்தாட்ட வீரனல்லவா? (சாம்பியன்) அவனுக்கு வைத்தியம் செய்யப் பணங் கேட்பதுண்டா! பணங் கொடுக்காது மோசம் செய்துவிடுவார்களா! கட்டாயம் கொடுப்பார்கள். வாருங்கள். வைத்தியத் தொழிலுடையவர்கள் இவ்வித கண்டிப்புடன் இருத்தல் சரியல்ல. உலகத்திலுள்ள எல்லாத் தொழில்

களை விட உங்கள் தொழிலல்லவோ ஆபத்தில் உயிர் கொடுக்கும் உத்தமமான தொழிலாகும். ஆபத்திற்குக் கை கொடுக்க மறுப்பது வித்தை கற்றதன் பலனாகுமா ?'' என்றான்.

இதைக் கேட்ட அங்கு உட்கார்ந்திருந்த மாதரசி கண்ணீர் பெருகியவாறு, "ஐயோ! உலகத்தில் உதவி செய்வதென்றால் மக்களின் மனோபாவம் எப்படி இருக்கிறது பார்த்தாயா! உம். நாங்கள் பெரிய செல்வவந்தராக விருப்பின் இப்படிச் சொல்வார்களா! எல்லாவற்றிற்கும் பணந்தான் காரணமல்லவா: உம். அவன் சம்பாதித்த பரிசுகள் அவனுக்கின்றி மற்ற யாருக்கு உதவவேண்டும்? இதோ இந்த பரிசுக் கப்புகளைக் கொண்டு மார்வாடியிடம் விற்றுவிட்டு 80 பவுண்டு ஐஸும், நான் லிஸ்டில் கொடுத்திருக்கும் சாமான்களையும் வாங்கிக்கொண்டு, வைத்தியருக்கும் பணத்தைக் கொடுத்து அழைத்துக் கொண்டு வா: ஜன்னி அதிகமாகிக்கொண்டே வருகிறது; அம்மாள் தத்தளிக்கின்றார்கள். இந்த எழவெடுத்த பந்தாட்டமே அவனுக்கு பெரும் மதிப்பும், கண்ணியமும் கொடுத்து மகிழ்வித்தது. அதுவே எமனாகஇப்போது நேர்ந்துவிட்டது. நாம் எத்தனை விதமான முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அத்தனையும்!செய்துவிடலாம்; பிறகு பார்த்துக்கொள்வோம். ஈசன் விட்ட வழி தெரிந்தே இருக்கிறது. இவ்வுயிரை நம்பி மற்ற இரு உயிர்கள் ஊசலாடுகின்றன. அவன் எங்களை விட்டு மறைந்து விட்டால் நாங்கள் அடுத்த க்ஷணம் மறையவேண்டிய முடிவை முன்னரே விதித்தாகி விட்டது. இனி தாமதம் வேண்டாம்.'' என்று கல்லும் கரைந்துருகும்படிக் கூறி இரண்டு கப்புகளை எடுத்து அவனிடம் கண்ணீர் பெருகக் கொடுத்தாள்.

படுக்கையில் படுத்திருக்கும் வாலிபனுக்கு சரியாகப் பேசவும், பார்க்கவும் போதிய சக்தி இல்லை; எனினும் இம்மங்கை கூறிய விஷயங்கள் அவன் செவியில் பட்டதும் மனம் தத்தளித்தது. கண்ணீர் கட்டு மீறி வழிகிறது. மெல்ல திக்கித் திக்கி பேச வாரம்பித்து, "பாரதி! எ...ன்...செ...ல்...வ...ச்...ச....கோ......த......ரீ...... இ......தோ......அ......ந்......த......க......ப்......பு......க...... ளை......இ......ப்......பா......வி......க்......கு......க்......கா......

ட்......டு......ஒ......ரு......த......ர......ம்....பா....ர்.....த்.....து ......வி.....ட்.....டு......த்......த.....ரு......கி.....றே......ன்.. ...என்ருன்.

இதைக் கேட்ட பாரதிக்கு இன்னும் துக்கமதிகரித்து விட்டது. கண்களைத் திறக்க முடியாது நீர் சொட்டுகிறது. "அண்ணு! நீ பார்க்கவேண்டுமா! இதோ இந்தா! பிடித்துக்கொள்ளு" என்று கையில் கொடுத்தாள். நோயாளி அதை வாங்கி தன் மார்போடணைத்துக் கொண்டான்; கண்களில் ஒற்றிக்கொண்டான். "நீங்களல்லவா எனக்குப் பெரும் புகழைக் கொடுத்தீர்கள். அத்தகைய உங்களை நான் விற்கப் போகிறேனே! எனது எழ்மையின் கொடுமையின் கூத்தல்லவா இது. என்னரிய கப்புகளே! என்றென்றும் உங்களிடையே நான் களிப்புற்றிருக்கலாம் என்று எண்ணி மனக் கோட்டை கட்டினேனே: எல்லாம் முறிந்து பாழாகிவிட்டதே என் செய்வேன்?" என்று பலவிதமாக எண்ணி வருந்தினன். அவனது தங்கை ஐஸ் பையைத் தலையில் வைத்துக் கொண்டிருந்தாள்.

இக் கோரமான கட்சியைக் கண்டு யார் மனந்தான் கரையாமலிருக்க முடியும்? தூரத்தில் நின்று இவைகளை கவனித்துக்கொண்டிருக்கும் நமது இளவலின் விசனம் இன்னும் ஆயிரம் பங்கு அதிகரித்துவிட்டது. அவனல் அதற்குமேல் தாங்க முடியவே இல்லை. "எத்தனையோ அருமையாக, வீரத்தனமாக ஆடிப் பரிசு பெற்ற இக் கப்புகளைப் பார்த்து அவன் மனம் என்ன தவிக்கிறது. சீச்சி! எல்லாம் நம்மாலன்ருே" என்ற ஒரு உணர்ச்சியை, எண்ணத்தை அவனல் தடுக்கவே முடியவில்லை. ஆவேசங் கொண்டவனைப்போல உத்திரவின்றி அவ்வறைக்குள் புகுந்து ஓடோடி வந்து,கீழே உட்கார்ந்து கட்டிலில் படுத்திருக்கும் வாலிபனின் கரத்தைப் பிடித்துக்கொண்டு "மாசிலாமணி! வீரசிகாமணி! என் குற்றத்தைப் பொறுப்பாயா? என் தப்பிதத்தை க்ஷமிப்பாயா?" என்று கெஞ்சிக் கேட்டவாறு கண்ணீர் பெருக்கினன். இந்த எதிர்பாராத ஆச்சரிய சம்பவத்தைப் பார்த்து அவனுடைய தாயார், பாரதி எல்லோரும் திடுக்கிட்டு "இவன் யார்?" என்று ப்ரமித்து நின்றுவிட்டார்கள்.

## 2-வது அதிகாரம்

## மோச வலைக்குள் மாசற்ற கிள்ளை

"உலகத்தில் உன்னைவிடச் சிறந்த பொருள் ஒன்று இருக்கிறதென்று நினைக்கின்றாய்? உம். அது சுத்த மடமையான எண்ணம். கண்மணீ! என்னுடைய இவ்வுடலில் ஜீவன் உலாவுகிறதென்றால் அது வேறு எதுவுமில்லை நீதான். உன் காதல்தான், கனிந்த அன்புதான் என்னை நடமாடச் செய்கிறது. இதை இன்னுமா நீ தெரிந்துகொள்ளவில்லை?" என்று முடுக்கான வாலிபன் ஓரிளம்பாவையை நோக்கிக் கூறினன்.

இதைக் கேட்ட அவ்வனிதை அவனது கரத்தை பற்றிக் கொண்டு "நாதா! நான் நம்பாமல் கூறுவதாக இருப்பின் என் அன்பைத் தங்கள்பால் செலுத்தியே இருக்க முடியாது. ஆதி முதல் நம்பி இருப்பதை மறந்துவிட்டீர்களே! நாதா! இப்படியே நாம் தினம் பேசிக்கொண்டும், விளையாடிக்கொண்டுமிருந்தால் நமது திருமணம் எப்போது நடப்பது? என் தாயார் இதே கவலையுடன் மெலிந்து போகிறார்கள். தாங்கள் அவர்களைக் கவனிக்க வேண்டாமா?" என்று கெஞ்சிக் கேட்டாள்.

பொன்னுசாமி:—நீ கூட என்ன படிக்காத—விவேகமற்ற—பெண்களைப் போலப் பேசுகிறாயே! கல்யாணத்திற்கு என்ன அவசரம். அநாகரிகமாக கல்யாணம், கல்யாணம் என்கிறாயே: கல்யாணம் செய்துகொண்டால்தான் உயர்வா? இல்லாவிடில் நம்முடைய காதல் வீணாகிவிடுமா! என்றும் அழியாத அன்பென்பதை மறந்துவிட்டாயே! அட பயித்தியமே. காமூ! பயப்படாதே: இன்று ஓர் உயர்தரமான குதிரைப் பந்தயம் நடக்கிறது. உன்மீது நான் 5 டிக்கட்டுகள் வாங்கி இருக்கிறேன். அதில் நமக்குக் கட்டாயம் ஜெயமுண்

டாகும் என்றுதான் தோன்றுகின்றது. எல்லோரும் அப்படியே சொல்லி இருக்கிறார்கள். ஆகையினால் நீ இந்த செயினைக் கொடுப்ப தற்குத் தியங்கமாட்டாய் என்று நம்புகிறேன். இதைப்போல நாலு பங்கு பணம் தப்பாது வரப்போகிறது. ஒரு செயினுக்குப் பதிலாக ஒன்பது நகைகள் செய்துகொள்ளலாம். என்ன சொல்கிறாய்?'' என்று வெகு நயமாகக் கேட்டான்.

காமு:—நாதா! நான் தங்கள் வார்த்தைகளை நம்பி நம்பி இது வரையில் எத்தனையோ விதத்தில் நீங்கள் சொல்லியபடி எல்லாம் கேட்டேன். இதுகாறும் நீங்கள் சொல்லியபடி விவாக விஷயத்தில் நடக்காமல் தள்ளிக்கொண்டே வந்ததுடன், இப்போது சில தினங்க ளாக விவாகம் செய்து கொண்டால்தான் உயர்வா என்ற வரையில் பேச ஆரம்பித்து விட்டீர்கள். இது எனக்கு மிகவும் பயமாகவும் விசனமாகவும் இருக்கிறது. இனிமேலும் இவ்விதமே தள்ளுவதா னால் அது ஏதோ விபரீதத்திற்குத்தான் வழி என்று என் மனத்தில் ஏதோ ஒன்று கூறுகின்றது. ஆகையினால் முதலில் நீங்கள் விவா கத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டு வேறு எதை வேணுமாயினும் செய் யுங்கள். இது தான் என்னுடைய கோரிக்கை—என்று கூறி அவன் கால்களைப் பிடித்துக் கொண்டாள்.

போன்:—ஏதேது? பெரிய பீடிகையுடன் உத்திரவு போடுகிறா யே! நீ இப்போதிருக்கும் நிலைமையைப் பார்த்தால் பெரிய மகாராணி என்று நினைத்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி நினைக்காதே! அதிக மாகச் சென்றால் எனக்கும் அதற்குமேல் செல்லத் தெரியும். என்ன சொல்கிறாய்? சங்கிலியை கொடுக்கிறாயா, மாட்டாயா?

காமு:—உம். நீங்கள் சொல்வது மிரட்டுவது போலல்லவா இருக்கிறது. சில நாட்களாகத் தாங்கள் என்னிடம் வித்யாசமே காட்டிக்கொண்டு வருகிறீர்கள். இதை எல்லாம் பார்த்தால் எனக்கு மிகவும் பயமாகவிருக்கிறதே! நாதா! தாங்கள் ஏன் இவ்விதம் மூர்க் கம் செய்கிறீர்கள்! என்மீது நீங்கள் காட்டும் அன்புங் கூடக் குறை வதாகவே எனக்குத் தோன்றுகிறதே! தாங்கள் என்போன்ற இன் னொரு பெண்ணுடன் நேசம் வைத்திருப்பதாக நான் கேள்விப்பட்

டேன். ஆனால் அதை நம்பவில்லை. என்னிடம் சொன்னவர்களுக்கே நான் அப்படி இருக்காதென்று கண்டித்தனுப்பினேன். எனக்குநீங்கள் இப்போதிருப்பதைப் பார்த்தால்—மிகவும் பயமாக விருக்கிறதே!...

என்று கூறி முடிப்பதற்குள் அம்மனிதன் நாகம்போலச் சீறி விழுந்து "என்ன சொன்னாய்? ஏதேது. நீ தலைகால் தெரியாமல் துள்ளுகிறாயே! சீச்சி! நீயோ பொட்டைச்சி! நானே வீரதிர ஆண் சிங்கம். என்னிடம் வாது பேசுகின்றாயா? போதும் உன் கடையைக் கட்டி வை. கழட்டு சங்கிலியை" என்று அட்டகாஸம் செய்தான்.

இதற்குக் காமு பயந்து நடுங்கி விட்டாள்; எனினும் தன் சங்கிலியைக் கொடுக்க கண்டிப்பாய் மறுத்ததோடு, தைரியமாக அவனை எதிர்த்து நின்று "நாதா! இப்பொழும் குதிரைப் பந்தயத்திற்குப் போக வேண்டாம். உங்களுக்கு வேறு நியாயமான செலவுக்குப் பணம் தேவை என்றால் நான் கட்டாயம் சங்கிலியைத் தருகிறேன். இந்த எழவெடுத்த குதிரைப்பந்தய மென்னும் படுகுழியில் விழ வேண்டாம்." என்று முற்றிலும் கூறி முடிக்குமுன் பொன்னுசாமி



"ஆகா! எனக்கு திட்டஞ் செய்யவும் துணிந்து விட்டாயா! உனக்கு அடங்கியவன் நானல்ல. வீணாக உடம்பை அலட்டிக்கொள்ளாதே. உனக்குச் சரியான பதில் கூறவும், உன்னை நடத்தவும் எனக்குத் தெரியும். ஜாக்ரதை!" என்று கூறி, அவளுடைய இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு அவள் எவ்வளவு மீறியும் சட்டை செய்யாமல் சங்கிலியை பலாத்காரமாக அறுத்து எடுத்துக்கொண்டு அவளை தள்ளிவிட்டுப் போய் விட்டான்.

பேதைப் பெண் என்ன செய்வாள் பாபம்! தன்னாலானவரையில் தடுத்தும் ஓர் திமிர்கொண்ட புலியை வெல்ல பெண் எலியால் கூடுமா? அப்பாதகன் தள்ளிவிட்டுச் சென்றதால் தடார் என்று கீழே விழுந்தாள். அந்த நிமிடம் வரையில் இப்பேதைப் பெண்ணின் மனத்தில் தன் வாழ்க்கையில் ஏதோ சுகமிருப்பதாக எண்ணி மனப்பால் குடித்த எண்ணங்கள் சடக்கென்று மேகம் போல பறக்கவும், தன் வாழ் நாளின் எதிர் காலத்தில் ஏதோ மகத்தான பயங்கரங்கள் நிறைந்திருப்பதாக பளிச்சென்ற மின்னல் கோடிபோல துள்ளித் துள்ளி தெரிந்து மறைந்தது. இந்த விபரீதத் தோற்றத்தினால் அவளுடைய அங்கம் பதறியது. ஏதோ ஒருவிதமான எதிர் கால தேவதையைப்போல் ஓர் பயங்கர உருவம் கண் முன்பு தோன்றி "உம். உன் கதி என் முகக்கண்ணாடியினால் தெரிகிறதா! உன் புது மோக மயக்கத்தின் பலன் தெரிகிறதா!" என்று கேட்டு ஏளனஞ் செய்து நகைப்பது போலத் தோன்றியது. அவளால் இந்த பயங்கர உணர்ச்சிகளைத் தாங்க முடியவில்லை. அப்படியே மூர்ச்சித்துவிட்டாள்.

அவளுடைய தாயார் ஓர் பெருங் குடும்பத்தில் பிறந்து பல விதமான கஷ்டங்களையனுபவித்து ஏழ்மை நிலைமையை அடைந்து விட்டாள். இதற்குக் காரணம் அவளுடைய புருஷன் அவளை வஞ்சனை செய்துவிட்டு மறு விவாகம் செய்து கொண்டு விட்டது தான். அவளது தலைவிதி காலம் முழுவதும் அவதிக்காளாக்கிவிட்டது. அவளுடைய பரிதாபத்திற்கு இரங்கி ஒரு பெண் குழந்தையைக் கடவுள் கொடுத்தது போல அவளுக்கு காமு பிறந்தாள். அக் குழந்தைக்கு 4, 5 மாதத்தில் தான் அவளது புருஷன் இளைய

மனைவியை இழுத்துக்கொண்டு கப்பலேறி வெளி நாட்டிற்குப் போய் விட்டான்.

புருஷன் வீட்டிலிருந்தும் பராமுகமாக விருப்பானேயானால் அப்போதும் மற்ற சுற்றத்தினர்கள் முதலியோர் லக்ஷியம் செய்யாது அலக்ஷியப்படுத்துவது உலக வழக்கம். புருஷனே அலக்ஷியம் செய்து விட்டுக் குழந்தையையும் தாயையும் தெருவில் தவிக்கவிட்டுச் சென்று விட்டால் வேறு யார் ஆதரிக்க முன் வருவார்கள். புருஷன் காலில் விழுந்து வேண்டினாள்; அழுதாள்; முறையிட்டாள்; முட்டிக்கொண்டாள்; எது கூறினும் பயனற்று விட்டது. தன்னந்தனியளாய் ஓர் குழந்தையுடன் நடுவீதியில் நின்றுவிட்டாள்.

நிற்க நிழலில்லை; உடுக்க உடையில்லை; உண்ண உணவில்லை. இம் மூன்றும் இல்லாது ஓர் ஜீவன் உலகத்தில் வாழவேண்டுமென்றால் எவ்விதம் முடியும்? குழந்தையுடன் தத்தளித்தாள். என் என்று கேட்பார் கிடையாது. தூரத்து பந்துக்களிடம் சென்று இறைஞ்சினாள். மருந்தும் விருந்தும் மூன்று நாட்கள் என்பது பழமொழி. அவைகளுக்கும் தக்க அந்தஸ்தும் மரியாதையுமிருப்பவர்களைத்தான் தேடுகிறார்கள். அனாதையிலும் அனாதைக்கு எவர் விருந்து செய்பவர்கள்? முதலிலேயே 'ஏண்டியம்மா! உன்னை ஆதரிப்பதென்றால் ஒரு நாளா; இரண்டு நாளா! ஆயுள் பரியந்தம் வைத்து ஆதரிக்க எப்படி முடியும்? ஒரு நாளைக்கு உணவளித்தால் அது போதுமா! உனக்கு நிரந்தரமான பிழைப்பை தேடிக் கொள்ளு!'' என்று கூறி விட்டார்கள்.

சொந்த மனிதர்களிடம்கேட்கவே வேண்டாம். அண்டுவதற்கே இடங் கொடுக்கவில்லை. சிற்றன்னை ஒருத்தி இருந்தாள். அந்த அம்மாள் மகா தடபுடல் பேர் வழி. அவளுடைய நடத்தையே கெட்டுப்போனது. இருப்பினும் தன்னையும் தன் குழந்தையையும் ஆதரித்தால் போதும் என்று அங்கு சென்று வேண்டினாள். தன்னுடைய ஊழல்கள், ரகஸியங்கள் எங்கே இவளால் வெளியாகிவிடுமோ என்கிற பயத்தினால் அவளும் நிராகரித்து விட்டாள். கடைசியில் செய்யும் வழியோ தெரியவில்லை, வயதோ சிறியது. தனித்து வாஸம்

செய்யவோ ஆபத்துக்கள் நேருமே என்கிற பயம். ஆகையினால் குழந்தையையும் கொன்றுவிட்டுத் தானும் உயிரை விட்டுவிடுவதென்று தீர்மானித்தாள். குழந்தையின் அழகிய மதிமுகத்தை நோக்கினாள்; அதைக் கொல்ல மனம் துணியவில்லை. "சீச்சீ! இந்த ஒரு குழந்தை பிறப்பதற்கு உலகத்தில் கோடானு கோடி தவம் செய்கிறார்கள். இத்தகைய அருமைக் குழந்தையையாவது கடவுள் நமக்கென்று மனமுவந்து அளித்திருக்கையில் இதைக் கொல்வதா! ஹா! என்ன கோரமான கொடிய எண்ணம் உதித்தது! நாம் எந்த விதமான பாடு பட்டாவது குழந்தையை வளர்த்து அதனால் நாம் பயனையடைய வேண்டும்" என்று தீர்மானித்து எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்.

ஒரு விதமான தைரியமும் மன உறுதியும் உண்டாகிவிட்டது. தான் தோட்டி வேலை செய்தோ, அடிமையாகவிருந்தோ தன் காலத்தை ஒழிப்பதென்று தீர்மானித்துவிட்டாள். யார் யாரையோ பிடித்துக் காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடினாள். யாரோ ஒரு புண்ணியவானின் தயவில் பிள்ளை பெறும் ஆஸ்பத்திரியில் பெருக்கிகுப்பை வாரிக் கொட்டி நோயாளின் மலஜலாதிகளை வாரிச் சுத்தி செய்யும் வேலை கிடைத்தது. மாதம் 8 ரூபாய் சம்பளம் கிடைத்தது. ஆஸ்பத்திரியை விட்டு வெளியில் போகக் கூடாது. சதா அங்கேயே இருக்க வேண்டும். அங்குள்ள தோட்டத்தில் வேலைக்காரர்களுக்கென்று சிறு குடிசைகள் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றிலொன்றில் தன் குழந்தையுடன் காலங் கழிக்கவாரம்பித்தாள்.

அங்கு செய்யும் வேலை மிகவும் கஷ்டமானதும், கடினமானமானதுமாகவிருப்பினும் தன் குழந்தையை வளர்க்கும் நிமித்தம் மலஜலாதிகளை வாரிக்கொட்டும் அசங்கியத்தையும் சகித்துக் கொண்டு பரமதிருப்தியோடு செய்து வந்தாள். ஆஸ்பத்திரியின் தர்பாரும் அதிகாரமும் கூறவேண்டுமா! தடி எடுத்தவர்களெல்லாம் வேட்டைக்காரர்கள் என்பது போல சிறு கத்துக்குட்டி நர்சுகளெல்லாம் நாய் போல வள்ளென்றும் நல்ல ஊசி பச்சை மிளகாய் போல கடு கடு, சிடு சிடு என்றும் சீறி விழுவார்கள். இவர்கள் கையிலகப்பட்ட நோயாளிகள் படும் பாடு சகிக்க முடியாது. "ஏழு ஜென்ம மெடுத்

தாலும் இத்தகைய சிடுமூஞ்சிகளிடம் அகப்பட்டுக்கொண்டு அவதியுற்றுச் சாக வேண்டாம்''. என்று தவிப்பார்கள்.

தாகம் என்ருல் தண்ணீர் கொடுப்பதற்குள் ஒரு யுகம் ஆய்விடும். இதே போல் ஒவ்வொன்றும் சிடுமூஞ்சி தேவதைகளின் சிறிய ஆட்சி தர்பார்களின் வைபவம் கூறவே திறமன்று. வேலைக்காரர்களின் கண்ணில் விரல் விட்டு ஆட்டுவார்கள். இந்தப் பேய்களின் கையிலகப்பட்டவர்களின் ஜாபிதாவில் விசாலாக்ஷியும் ஒருத்தி என்று கூற வேண்டுமா? குழந்தை அழுகிறதே என்று சற்று அதைச் சமாதானம் செய்யச் சென்ருல், "ஏ கழுதை! வேலைக்கார நாயே! வேலைக்கள்ளிக்குப் பிள்ளை மீது சாக்கோ! உம். அந்த பிள்ளையை அப்படி போட்டுவிட்டு வா கயிதே! சீக்கிரம்!'' என்று கத்துவார்கள்; அதட்டுவார்கள். சில சமயம் கொம்பாலும் அடித்து விரட்டுவார்கள்.

அந்தோ! பேத்த மனம் பித்து என்பது போல இக் குழந்தையின் போஷணைக்காகவன்றோ இத்தனை கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு வேலை செய்தாள். எழுந்தால் திட்டு; நின்ருல் குட்டு என்ற இடத்தில் யார் தான் எத்தனை காலந்தான் சகிப்புத்தன்மையுடன் பொறுக்க முடியும்? அவ்விடத்திலும் நல்ல மருத்துவர்களும் நர்ஸுகளும் சிலர் இல்லாமலில்லை. அவர்களால்தான் அங்கு நோயாளிகளுக்கோ, வேலையாட்களுக்கோ சற்று தெம்பும், ஆறுதலும் உண்டாகும்.

இத்தகைய வைபவத்தில் சுமார் 5 வருட காலம் உழைத்தாள். அதற்குமேல் அங்கு இக் குழந்தையுடன் உழைக்க முடியவில்லையாதலால் அதை விட்டு விட்டு வந்துவிட்டாள். ஒரு ஓட்டலில் பாத்திரங் கழுவிப் பெருக்கி எச்சிலிட்டு வேலை செய்து வந்தாள். குழந்தைக்கும் அவளுக்கும் போதிய ஆகாரம் கிடைத்து வந்தது.

அந்த ஓட்டல்காரருடைய மகன் ஓர் சிறிய பள்ளிக்கூடத்து உபாத்தியாயராக விருந்தான். அவன் இவள் மீது மனமிரங்கி அந்தப் பெண்ணையும் தன்னுடன் அழைத்துச் சென்று கல்வி கற்றுக் கொடுத்து வந்தான். இயற்கையிலேயே அப்பெண் நல்ல புத்திசாலி

யாகையினால் நன்றாக சுறுசுறுப்பாகப் படித்து அச் சிறிய பள்ளிக் கூடத்திலுள்ள வகுப்புகளில் பாஸ் செய்துவிட்டாள். அதற்கு மேல் என்ன செய்வது? அவள் தன் பள்ளிக்கூட சினேகிதைகளின் உதவியைப் பிடித்து அவர்களின் தாய் தந்தையர்களைக் கண்டு தன்னை இலவசமாகச் சேர்க்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டாள். அவர்கள் மனமிரங்கி அப் பெண்ணின் ஊக்கத்திற்கும் ஆசைக்கும் மெச்சி வேறொரு பள்ளிக்கூடத்திற்கு சிபார்சு செய்தார்கள்.

காமுவும் அங்கு மிகவும் புத்திசாலியாகப் படித்து வந்தாள். வருடங்கள் சில கடந்தன. ஒன்பது வகுப்பு வரையில் படித்தாள். அந்த வகுப்பில் தோல்வி யடைந்து விட்டதால் இனாமாகக் கொடுத்து வந்த சம்பளத்தை நிறுத்திவிட்டார்கள். அதற்கு மேல் சம்பளங் கட்டி எவ்வாறு வாசிக்க முடியும்? விசனத்துடன் படிப்பை நிறுத்திவிட்டுக் கலங்கினாள். அச்சமயம் அவ்வோட்டலுக்கு அடிக்கடி வரும் ஒருவன் இவர்களை நன்றாக அறிந்தவனாகையினால் விசாலாட்சியை நோக்கித் தான் படிப்புக்கு ஏற்பாடு செய்வதாயும் "நன்றாகப் படித்து S. S. L. C. பாஸ் செய்துவிட்டால் ஒரு வாத்தியார் வேலை கிடைத்துவிடும்; 30-40 சம்பளம் வரும். தாராளமாக அதைக் கொண்டு நீங்கள் கஷ்டமின்றி ஜீவிக்கலாம்" என்றும் அனேக ஆசை வார்த்தைகளால் தைரியங் கூறினான்.

காமுவுக்குப் படிப்பின் மீதே பெரும் ஆர்வம் இருந்ததால் உடனே இணங்கி விட்டதோடு தாயாரையும் சரிப்படுத்திவிட்டாள். அந்த விதத்தில் துணை புரிந்த அவனை பேசுந் தெய்வமாகவே நினைத்து அபாரமான மதிப்பை வைத்துவிட்டாள். பள்ளிக்கூடத்திலும் சேர்ந்தாயிற்று. தினந்தோறும் அவ் வாலிபன் இவளைச் சந்திக்கத் தொடங்கினான். நாளாவிருத்தியில் காமுவின் மனத்தை முற்றும் ஆகர்ஷித்து விட்டான். இதற்குள் ஒரு வருடமும் ஓடி மறைந்தது. இம் முறையும் தோல்வியே அடைந்துவிட்டாள்.

இதற்குமேல் என்ன செய்வது? எங்கு படிப்பது? எல்லாம் பயனற்று விட்டது. அவ் வாலிபன் மட்டும் சினேகிதத்தை விட

வில்லே. காமுவும் அவனை மனப் பூர்வமாக நம்பிக் காதலித்து விட்டாள். விசாலமோ இப்போதும் ஓட்டலில் வேலே செய்து ஆகாரமும் பணமும் கொண்டுவருவதை நிறுத்தவில்லே. காமு அருகிலுள்ள இரண்டு வீட்டுக் குழந்தைகளுக்குப் பாடங் கற்றுக்கொடுத்து வந்தாள். அதில் சுமார் 10 ரூபாய் கிடைத்தது.

காமு பொன்னுஸாமியே தனக்கு மணவாளன் என்று முடிவு செய்துவிட்டாள். அவனும் இவளேயே மணப்பதாக வாக்குக் கொடுத்து அதன்படியே பேசி வந்தான். வருடம் ஒன்று, இரண்டு என்ருகிக் கொண்டிருக்கிறது. இன்னும் விவாகத்திற்கு வழியைக் காணேம். காமு தினம் அவனைப் பார்க்கும்போதெல்லாம் 'விவாகத்தைச் செய்துவிட்டால் நலமாக விருக்குமே.' என்று கேட்டுக் கொண்டே இருப்பாள். எப்படியும் விவாகம் நடக்கப் போகின்றது. நாம் ஏன் பயந்து நடக்கவேண்டும்?'' என்று பலவித தந்திரங்களேக் கூறி பொன்னுசாமி சகஜமாகப் பழகி வந்தான். அவனை காமு முற்றிலும் நம்பிவிட்டதால் வித்யாசமே பாராட்டவில்லே. சில நாட்களாக அவனுடைய நடத்தையில் மாறுதல்கள் இருப்பதைக் குறிப்பாயறிந்து கொண்ட காமு நாம் இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் தெரிவித்தபடி கேட்டாள். பிறகு அச்சம்பவங்கள் நடந்தன.

சற்று நேரங் கழித்து மூர்ச்சை தெளிந்து அவள் கண் திறந்தாள். கிழவியோ வீட்டிலில்லே; ஓட்டலுக்குச் சென்றிருந்தாள். காமுவின் நிலேமை மிகவும் தத்தளிப்பாகிவிட்டது. தன்னேயே நம்பித் தன் பொருட்டு மலஜலாதிகள் முதல் வாரி வேலே செய்து,தன்னேயே உயிர் நிலேயாக நம்பி இருக்கும் தன் தாயருக்கு தன்னுல் எவ்விதமான உபகாரமுமின்றி வருந்திக் கலங்கும்படியாகி விட்டதே என்ற துயரம் பெரிதாகப் பொங்கி விட்டது. "ஐயோ! நாம் மனப் பூர்வமாக நம்பியதற்குப் பலன் மோசம் போவது தானே! ஹா! இதற்குத்தான் விவாக மென்கிற பந்தத்தைப் பெரியோர்கள் வைத்திருக்கிருர்கள். அந்த சடங்கைப் பலரறிய கடவுள்மீதாணேயாக, அக்கினி சாக்ஷியாக நடத்திவிட்ட பிறகு இத்தகைய ஆபத்துக்கள் உண்டாகுமா! ஹத்து மீறிப் பெரியாரின் புராதன வழக்கத்தைப் புறக்கணித்துவிட்டு புதிய மோகத்தில் வீழ்ந்து விட்டதன் பயன் இது தான்.

என்ன செய்வேன்? அவர் சென்றிக்கும் விதத்தைப்பார்த்தால் நமக்கு நற்காலத்திற்கு வழி இல்லை என்றே தோன்றுகிறதே ஈசா! இதென்ன சோதனை! என்னப்பனே!' என்று கண்ணீர் விட்டுக் கலங்கித் தவிக்கின்ருள்; தன் விதியை எண்ணி எண்ணிப் பெரு மூச்சு விடுகின்ருள்.

இரவு சுமார் 9 மணிக்கு விசாலாக்ஷி ஒட்டல் சாப்பாட்டுடன் வந்தாள். தன் தாயார் தனது மாறுதலைக் கவனித்தால் மிகவும் கலங்குவாள் என்று எண்ணி, தன்னைத் தான் சமாளித்து உட்கார்ந்து தாயாருடன் வழக்கப்படி போஜனஞ் செய்தாள். இன்று நடந்த சம்பவங்களை ஏதும் கூறவில்லை. இரவு முற்றும் தூங்காமல் தத்தளிக்கின்ருள். எதிர் கால வாழ்க்கையின் நிலைமை என்ன விபரீதமாகி விடுமோ என்ற பயங்கரம் மனத்தைப் பிளந்து வதைக்கின்றது.

நாட்கள் சிலவாகிப் பலவாகி, வாரங்களாகி, மாதத்திற்கும் வந்துவிட்டன. அன்று சங்கிலியை அறுத்துக்கொண்டு சென்ற பொன்னுசாமியை மறுபடியும் காணவே இல்லை. அவன் இருப்பிடத்திற்கு ஆளை யனுப்பி விசாரித்ததில் "அத்தகைய பெயரையுடையவன் இந்த வீட்டில் என்றுமே கிடையாது" என்கிற பதிலே கிடைத்தது. இதைக் கேட்ட பிறகே முதலிலிருந்தே மோசக் கருத்துடன்தான் பழகித் தன்னை முற்றிலும் ஏய்த்துவிட்டான் என்று காமு தெரிந்துகொண்டாள். இதற்குமேல் எங்கு தேடுவது? இவளோ பெண் பேதை. சில தினங்களாகப் பொன்னுசாமி வராமையினுல் விசாலம் கேட்கத் தொடங்கினுள்.

அதற்குமேல் ஒளிப்பது முடியுமா! சகலத்தையுங் கூறிவிட்டாள். விசாலத்தின் வயிற்றில் இடி இடித்தது போலாய்விட்டது "ஐயோ! நான் முதலிலிருந்தே நம்பாதே: இவனுடைய நேசம் எத்தகையதோ! வேண்டாம்; வேண்டாம்" என்று முட்டிக்கொண்டேனே கேட்டாயா? உன் படிப்பிலிருக்கும் ஆசையினுல் சகல விதத்திலும் நம்பிப் பாழாகி விட்டாயே என்ன செய்வேன்? உன் பொருட்டாக நான் படாத பாடெல்லாம் பட்டு உன்னை யொரு உருப்படி யாக்கினேனே. உன்னுல் சகல கஷ்டங்களும் நிவர்த்தியாகிப் பிற்காலத்திலாவது சந்தோஷமாக வாழலாமென்று நான் மனப்பால் குடித்

தேனே! இப்போது இப் படுமோசக் குழியில் விழுந்து விட்டாயே என் மகளே! என்ன செய்வேன்?'' என்று கதறினள்.

தாயாரின் துயரத்திற்குத் தான் எவ்வாறு சாந்தி செய்தல் கூடும். "ஐயோ! நம் அன்னை யறியாத மற்ருேர் பயங்கர மென்னும் நாகம் நம்மைச் சுற்றி இருக்கிறதை எவ்விதம் உரைப்பது?'' என்ற திகில் அபாரமாகப் பிடித்துவிட்டது. எத்தனையோ இடங்களில் அவர்களாலான வரையில் அலைந்து பார்த்தும் பலனே இல்லை. நாட்கள் செல்லச் செல்ல காமுவின் பயங்கரம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

சில நாட்கள் சென்றன. பொன்னுசாமி எங்கேயோ ஒரு பெண்ணை நேசித்து அவளுடன் இருப்பதாகச் செய்தி யறிந்த காமு அந்த இடத்தை தேடிப் பிடித்துக்கொண்டு அங்கு சென்ருள். அந்த சமயம் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்த ஓர் அழகியை பொன்னுசாமி முத்தமிட முயன்ருன். ஆத்திரத் துடன் சென்ற காமு அவர்களுடைய உத்திரவில்லாமலேயே எதிரில் சென்று, காளிதேவி போன்று ஆவேசங் கொண்டு "ஹா! நாதா! நான் இன்னமும் தங்களை இம் முறையி லேயே அழைக்கின்றேன். தாங்கள் செய்யும் அக்ரமம் தகுமா! இதைக் கடவுள் தான் சகிப்பாரா! என்னை இவ்விதம் பரிபவப் படுத் துவதற்குத் தான் தாங்கள் முதலிலிருந்து மோசக் கருத்துடனேயே பழகி, நேசங் காட்டி இருப்பதுபோல வேஷம் போட்டு என்னை நாச மாக்கி விட்டீர்களா! என் வயிற்றெரிச்சலும் கண்ணீரும் வீணுகிப் போய்விடுமா! உங்களுடைய யோக்யதையை அறியாமல் நான் என் வாழ்நாள் முழுமையையும் பாழ்படுத்திக் கொண்டேனே! மீளாத துயரத்திற்கும், நரகத்திற்கும் ஆளாக்கி விட்டீரே! இதுதான் உமது யோக்யதையின் லக்ஷணமா! உமது தொழிலே இவ்விதம் பெண்களைக் கெடுத்துப் படுகுழியில் தள்ளுவதுதானு! இந்த உத்தம மான தொழிலுக்கு எத்தனைப் பெண்கள் பலியாஞர்களோ தெரிய வில்லையே. அம்மணி! இந்த மனிதன் முழு மோசக்காரன். இவனை நம்பாதீர்கள். இவன் மாய வலையை வீசி என்னுடைய விலையிலா மாணிக்கமாகிய கற்பை அபகரித்துக்கொண்டு என்னை நடுத் தெரு

வில் விட்ட கள்ளன் இவன். இவனுடைய வலையில் நீங்களும் விழுந்து விடவேண்டாம்.

அந்தோ! இப் பாதகனின் வாக்கை நம்பிப் பெரியாரின் ஆணையையும் மீறி வரம்பு கடந்து புத்தி பிசகிப் படுகுழியில் விழுந்துவிட்டேன் தாயே! என்னுடன் இப் பாதகனின் செயல் போதும்; நீயும் அகப்பட்டுக் கொள்ளாதே! ஏ மாய வித்தைக்காரனே! எனக்கு இப்போது என்ன பதில் சொல்கிறாய்? உன்னை இனி நான் இலேசில் விடப் போவதில்லை. பஜீத் செய்துவிட்டுத்தான் போகப்போகிறேன்.'' என்று பெரும் ஆவேசத்துடன் கூறினாள். பொன்னுசாமியின் முகத்தில் பிரம்மஹத்தி களை உலாவுகிறது. திருகத்திருக விழிக்கின்றான். இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கண்டு அங்கு உட்கார்ந்திருந்த நங்கை கதி கலங்கிவிட்டாள். காமுவின் முகத்தையும் பொன்னுசாமியின் முகத்தையும் மாறி மாறிப் பார்க்கிறாள். திக்பிரமை கொண்டு விழித்துக் கல்லாய்ச் சமைந்து விட்டாள். அவளுடைய தாய் தந்தையர்களும் அங்கு அதே சமயத்தில் வந்துவிட்டதைக் கண்ட பொன்னுசாமியின் நிலைமை எவ்விதம் இருக்கும்? ஆடு திருடிய கள்ளன் போலாய்விட்டான்.

182972
சென்னை 600 008

## 3-வது அதிகாரம்

## இன்ப நேசம்—துன்ப விலாசம்

“உலகம் மெச்சும் உத்தமன் ராஜசேகரனா! பந்தாட்ட வீரனா (சாம்பியனா) என்ன இது! நீயா என்னை இப்படிக் கேட்பது? இது உன் தொழில் முறையின் தர்மமல்லவே! ராஜசேகரா! உன்னுடைய திறமையினால் நீ ஜெயித்தாய். ஆட்டத்தில் அடிபடுவது சகஜமல்லவா? இதற்கு நீ வருந்துவானேன்?'' என்று திக்கி திக்கித் திணறியவாறு மாசிலாமணி கூறினான்.

அப்போதுதான் பாரதிக்கும், அவள் தாயாருக்கும் இவன்தான் பந்தெறிந்தவன் என்று தெரிந்தது. மாசிலாமணிக்கு, தன் தாயார் எங்கே பழயபடி திட்டக் கிளம்பிவிடுகிருளோ என்ற பயம் உள்ளுக்குள் பாதிக்கிறது. அதற்காக அவன், தன் சகோதரியை நோக்கிச் சைகையினுல் விஷயத்தைக் கூறிவிட்டான். மகா யூகசாலியும் அபாரமான புத்திசாலியுமான பாரதி, தன் தாயை வெகு சூக்ஷ்மமாக அடக்கிவிட எத்தனிப்பதற்குள்ளேயே அந்த அம்மாள் "ஏண்டாப்பா! நீதான் என் மகனின் மண்டையை உடைத்து புண்ணியங் கட்டிக்கொண்ட மகானுபாவனே? உங்க ஆட்டத்தில் இடி விழ" என்று ஆரம்பித்துவிட்டாள்.

பாரதியும் மாசிலாமணியும் திகைத்துப் போய்விட்டார்கள். பாரதி வெகு சாந்தத்துடன் தன் தாயை இழுத்துக் கொண்டுபோய் உள்ளே அமர்த்திவிட்டு வந்து "ஐயா! பழங் காலத்துக் கிழங்களின் செய்தி கேட்கவேண்டுமா? ஏதோ விவரம் இன்னதென்று தெரியாது அறியாமையால் கூறிவிட்டாள். அதைத் தாங்கள் மன்னிக்க வேண்டும். இவளுடைய மகனின் பெயரும் கீர்த்தியும் பத்திரிகையில் வருகையில்—கப்புகளைப் பார்க்கையில்—அளவற்ற மகிழ்ச்சியடைந்து கூத்தாடுகிருள். இம்மாதிரி பந்தெறியும்போது இவன் எத்தனை பேர்களின் தலையில் போட்டிருப்பானே அது தெரியுமா! அந்த ஆட்டத்தின் ரீதி அது என்று இருக்கமாட்டாள்," என்று சமாதானங் கூறினுள்.

ராஜ:—அம்மணி! இதைப்பற்றி நான் ஒரு சிறிதும் கவலைப் படவில்லை. என்னுடைய மனிதர்களாக விருப்பினும் இப்படித்தான் கூறுவார்கள். இது உலக வழக்கம். எத்தனையோ காலமாகப் பந்தாடி வரும் எனக்கும் இந்த விபத்தினுல் மனந் தத்தளிக்கின்றது. நான் எத்தனை சமாளித்தும் கேட்கவில்லை. இதுவரையில் எத்தனையோ பெயர்களுக்கு அடிகள் பட்டிருப்பினும் இம்மாதிரி பலமாக ஆபத்து நேரக் கூடிய விதத்தில் பட்டதே கிடையாது. என்னுடைய போதாக் காலத்தின் பயன்தான் இவ்விதம் பட்டதென்று என் மனம் படும் பாட்டை அந்த கடவுளே தானறிவார். ஆயினும் நான் என்ன செய்யக்கூடும்? கூட்டத்துடன் கூட்டமாகத் தவித்தேன்.

எனது அன்னைக்கு அன்னையார்தான் எனக்கும் அன்னை. அவர்களுக்கு உடம்பு சரியில்லை உடனே வரவேண்டுமென்ற தந்தி அதே சமயம் கிடைத்தது. உடனே நான் அந்த அன்னையின் பாசத்தில் கட்டுண்டு ஓடினேன். ஆட்டத்தில் ஜெயம் பெற்றதும் கப்புகள் பெற்றதும் எனக்குச் சற்றும் தெரியவே இல்லை. மனம் முற்றும் இவ்விடமே நினைவாகத் தத்தளித்தது. என் பாட்டியாருக்குச் சற்று குணமான தும் ஓடிவந்தேன். இனி நான் என்னதான் செய்யப் போகிறேன். ஆட்டத்தின் உத்ஸாகத்தில் தலை கால் தெரியாமல் விக்கெட் எடுத்துவிடவேண்டுமென்று பந்தை ஓங்கி எறிந்தேன். அது இவன் தலையில் தாக்கிப் படுகாயத்தை உண்டாக்கி என்னையே கலங்க வைத்துவிட்டது.

மாசிலாமணி! எப்படி இருக்கிறாயப்பா? வேதனை அதிகமாக விருக்கிறதா! வைத்தியர் விஷயத்தைக் கேட்க ஆச்சரியமா யிருக்கி றது. பந்தாட்டத்தில் சம்மந்தப்பட்ட எவரும் வந்து பார்க்கவில் லையா? உதவி புரியவில்லையா? இதென்ன அனியாயம்! உன் உயிருக்கு உயிரான கப்புகளை விற்பது என்ற வாக்கியத்தைக் கேட்டதும் என் மனம் அனலிடை மெழுகென உருகியது; தத்தளித்தது. நண்பா! மாசிலாமணி! நீ அந்தக் கப்புகளை வைத்துக்கொண்டு வருந்திய காட் சியை நான் என்றுமே மறக்க முடியாது.

அம்மணி! அந்தக் கப்புகளை வாங்கி அப்படியே மற்றவைக ளோடு வையுங்கள். இந்த நோட்டை மாற்றி ஐஸ் வாங்கிக்கொண்டு வரச் சொல்லுங்கள். ரூபாயைக் கொடுத்து டாக்டரை வரவழை யுங்கள்'' என்று கூறியபடியே இரண்டு 10 ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்தான்.

பாரதி, தன் அண்ணனின் முகத்தைப் பார்த்தாள். ஜன்னி யின் வேகம் ஏறிக்கொண்டே வருவதால் அவனுக்குப் பேச முடிய வில்லை. பாரதி ராஜசேகரனுடைய அதி உன்னதமான குணத்தைக் கண்டு உள்ளுக்குள் வியப்புற்றாள். தம் குற்றம் அறிதல் கற்றோர்க் கழகு என்னும் வாக்கியத்தின் உண்மையை அறிந்து மகிழ்ச்சி யுற்றாள். 'இந்த ஆபத்தான சமயத்தில் மரியாதை பார்த்துக்கொண்

டிருந்தால் காரியம் கெட்டுவிடும்' என்று எண்ணி அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு ஐஸ் முதலியன வாங்கிவர ஆளை அனுப்பினுள்.

பின்னர் "ஐயா! இச் சமயத்தில் தங்களது உதவிக்கு நாங்கள் என்ன ஈடு செய்யப் போகிறேம். அடிபட்ட அன்று ஆயிரக்கணக்கில் கூட்டம் வந்து குழுமி விட்டார்கள். என் தாயாருக்கு அன்று இருந்த ஆவேசத்தில் தாறுமாருக வாயில் வந்தபடி எல்லாம் புத்திர வாஞ்சையினுல் திட்டிவிட்டார்கள். அதனுல் அனேகருக்குக்கோபம் பொங்கிவிட்டது. எங்களுக்கோ அயோமய மாகிவிட்டதால் ஒருவரையும் சமாதானம் செய்யவும் தோன்றவில்லை. எத்தனையோ பேர்கள் உதவி செய்யவும் முன் வந்தார்கள். என் தாயார் அவர்களின் முன்பு அநாகரிகமாக அடித்துக்கொண்டு அலறினுள். இந்த உபத்திரவத்திற்கே எல்லோரும் வராமலிருந்து விட்டார்கள்.

அவர்களில் ஒருவர் 50 ரூபாய் நோட்டைக் கொடுத்து வைத்தியம் செய்யும்படி கூறிச் சென்றுர். பணத்தை இந்த அலமாரியில் வைத்தேன். இந்த சந்தடி சாக்கில் பார்க்க வந்த கூட்டத்தில் எந்த புண்ணியவானே எரிகிற வீட்டில் கிடைத்தது லாபம் என்பது போல அபகரித்துக் கொண்டுபோய் விட்டான். இந்த வெட்கக் கேட்டை யாரிடம் கூறுவது? நாங்கள் எந்த ஸ்திதியி லிருக்கிறேம் என்பது தாங்களறிந்த விஷயம். என்ன செய்வோம்?

இன்னெரு பெரியார் 50 ரூபாய் மறுநாள் கொடுத்தார். அதை வெகு ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு செலவு செய்தேன். இரண்டு நாட்களில் வயித்தியனுக்கும் மருந்திற்கும் மற்ற செலவிற்கும் சரியாகிவிட்டது. ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுங்கள் என்று சிலர் கூறுகிறுர்கள். ஆஸ்பத்திரிக்குப்போக என் தாயார் சம்மதிக்கவில்லை. அங்கு சொந்த மனிதர்களை உள்ளே விடுவது கிடையாதாம். அதற்கு அம்மா வருந்துகிறுள். கிழப் பிராணன். என் தாயாரின் கடைசி காலத்திற்கு நாங்கள் இருவரும் இரட்டையாகப் பிறந்தோம். எங்கள் பிதா எங்கள் சிறிய பிராயத்திலேயே இறந்துவிட்டார்.

என் தாயார் தமக்கிருந்த சொல்ப சொத்தைக் கொண்டு எங்களை வெகு சாமர்த்தியமாக வளர்த்தாள். சிறிது கல்வியும் ஊட்

டினாள். கடைசி காலத்தில் இவ்விதமாகிவிட்டதால் மகத்தான ஆத்திரமும் விசனமும் உண்டாகிவிட்டன. இன்னது சொல்வதென்பதை யறியாது உளறுகிறாள்." என்று வருத்தத்துடன் கூறினாள். இதற்குள் ஒருவன் ஓட்டமாக ஓடி ஐஸ் வாங்கிக்கொண்டு வந்தான். பாரதி அதை யவனுக்கு ஒத்த வாரம்பித்தாள்.

ராஜசேகரன் வெகு பணிவுடன் "தாயே! வேறு ஏதேனும் காரிய மிருப்பின் தாங்கள் அதைச் செய்யுங்கள். நான் ஐஸ் வைக்கின்றேன்" என்று கேட்டான். பாரதி ஐஸ் பையை ராஜசேகரனிடம் கொடுத்துவிட்டு, மாசிலாமணியின் காலில் தைலந் தடவித் தேய்க்க வாரம்பித்தாள். மாசிலாமணியின் நிலைமை மிகவும் பலவீனப் பட்டுக்கொண்டே வந்தது. அந்த நிலைமையிலும் அவன் ராஜசேகரனின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "ராஜசேகரா! இதென்ன காரியம் செய்கிறாய்? நீ இப்படி என் பக்கத்தில் உட்காரு," என்று அழைத்தான்.

ராஜசேகரன் கட்டிலுக் கருகாமையில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஐஸ் வைத்தபடியே "மாசிலாமணீ! எனக்கு உபசார வார்த்தைகள் வேண்டாம். நீ நிம்மதியாகப் படுத்துக் கொண்டிரு. நான் இந்த காரியத்தையும், இதை விடப் பெரிய காரியங்களையும் என்னுடைய கடமை என்று எண்ணிச் செய்வதற்குத் தயாராக விருக்கிறேன். நீ சற்றும் கவலையே படாதே. வலி எப்படி இருக்கிறது?" என்றான்.

அதே சமயம் முதல் நாள் வந்து கட்டு கட்டிய மருத்துவர் வந்தார். அவர் முதல் நாள் கட்டு கட்டிவிட்டு ஏதோ சொந்த அலுவலாக வெளியூருக்குச் சென்றுவிட்டார். இன்று வந்தவுடனே இன்னும் குணமாகாததைக் கேள்வி யுற்றுப் பார்க்க வந்தார். இங்கு ராஜசேகரன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துப் பரிகாஸமாக நகைத்துக்கொண்டே "என்ன ராஜசேகரா! என்ன போ; விக்கெட் எடுக்க ஆசைப்பட்டு நீ அபாரமான வல்லமையுடன் இவன் தலையை உடைத்துவிட்டாயே! பேஷ். ஆட்டமென்றால் அதுதான் ஆட்டம். சரியான போடு போட்டு ஜெயித்துவிட்டாய். இதற்கென்ன குணமாக்கி விடுகிறேன்," என்று கூறிக்கொண்டே கட்டை யவிழ்த்தார்.

அன்று நெத்தியில் பந்து பட்ட வேகத்தில் நெத்தியின் சதையே கிழிந்துவிட்டதைத் தையல் போட்டிருந்தார். அது முற்றிலும் சீ பிடித்துக்கொண்டு வெகு கோரமான ரணமாக விருப்பதையும், அதனால் ஜுர வேகம் 105 டிக்கிரி ஆகிவிட்டதையும், ஜன்னியின் குறிகள் தோன்றி யிருப்பதையுங் கண்டு பயந்து அவர் உடனே பலமான சிகிச்சைகளைச் செய்யத் துடங்கினார். ஊசி குத்திவிட்டு மருந்துகளை மாற்றி மாற்றிக் கொடுத்துச் சில முறைகளையுங் கூறிவிட்டு, வெகு ஜாக்ரதையாகக் கவனிக்குமாறு சொல்லிச் சென்றார்.

ராஜசேகரனுக்கோ மாசிலாமணியினுடைய நிலைமையைக் கண்டு இன்னும் அதிகரித்த பயமும், திகிலும் உண்டாகிவிட்டன. அவனுடைய வேதனை நிமிடத்திற்கு நிமிடம் பெருகிக்கொண்டே வருகிறது. 'இவனுடைய ஆபத்து நீங்கி எழுந்திருக்க வேண்டும்' என்று பகவானை மனப் பிரார்த்தனை செய்தவாறு உட்கார்ந்திருக்கிறான்.

மாசிலாமணிக்கு, கண்ணைத் திறக்க முடியவில்லை. எனினும் அவனுடைய மனத்திற்குள் ஏதோ ஒருவிதமான அதைரியமும் பயமும் தோன்றிவிட்டன. கண்ணைத் திறந்து தன்னருமைச் சகோதரியைப் பார்க்கிறான். கண்ணீர் மாலை மாலையாக வழிகிறது. வாயைத் திறந்து எவ்வித வார்த்தையும் கூற முடியவில்லை. பாரதியும், அவள் தாயாரும் நடுக் கடலில் இருப்பவர்களைப் போல தத்தளிக்கின்றார்கள். எந்த சமயம் என்ன நேருமோ என்கிற திகில் பூர்ணமாகப் பிடித்துவிட்டது.

சிறிது நேரத்திற் கொரு முறை "அண்ணா! அண்ணா!" என்று பாரதி அழைத்து அன்புடன் நோக்கியவாறு தொட்டுத் தொட்டுப் பார்க்கிறாள். எள்ளளவு மாறுதலும்—குணமும்—காணப்படவில்லை. ராஜசேகரன் அன்றும் அவ்விடத்திலேயே இருந்து கண் விழித்து இரவு முற்றும் பார்த்துங்கொண்டே இருந்தான். இவ்விதம் அதிகமாக ஆக மாசிலாமணி கண் திறக்கவோ பேசவோ இல்லாது நின்றுவிட்டது.

இந் நிலைமையிலேயே பின்னும் இரண்டு மூன்று தினங்களும்

கடந்துவிட்டன. ராஜசேகரன் டாக்டர் மேல் டாக்டராக வர வழைத்துப் பார்க்கிறான். ஒவ்வொருவரும் தம் தம் திறமைப்படிக்கு இது ரண ஜென்னி கண்டுவிட்டது என்றும், விஷ ஜுரம் கூடக் கலந்து அடிக்கிறதென்றும், தலையிலுள்ள எலும்பைத் தாக்கிவிட்ட தால் மூளையே கலங்கி விட்டதென்றும் பலவிதமாக அபிப்ராயங்க ளைக் கூறினார்கள். பார்க்க வரும் ஜனங்களெல்லாம் பரிதாபப்பட்டு "ஐயோ! இப்படி வந்துவிட்டதே!" என்று மனங் கலங்கிக் கூறு வது இங்குள்ளோரின் விசனத்தை அதிகரிக்கச் செய்கின்றது.

நான்கு தினங்களாகப் பேசாமல் படுத்திருந்த—ஸ்மரணையே யற்றிருந்த—மாசிலாமணி அவனை மீறிய ஆவேசத்துடன் கண்ணைத் திறந்து பார்த்தான். கண்கள் கோவைப் பழம்போல விருக்கின் றன. படபடத்த குரலில் "பாரதீ! பாரதீ! அருமைத் தங்கமே! அம்மா! அம்மா! எங்கே? நீங்களிருவரும் எங்கே! ராஜசேகரன் போய்விட்டானா!...ராஜ...சேக...ரா......நண்பா......இனி நான் பிழைக்கமாட்டேன். ஆம். பிழைக்கமாட்டேன். எனக்கு ஏதோ புதிய உலக வாழ்க்கை கிடைத்திருக்கிறது. என் தங்கத்தை,-என் னருந்தவச் சகோதரியை—என்னுருயிர் தாயாரைக் காப்பாற்றாது கைவிட்டுவிட்டேனே! என் கடமையை முடிக்காது பாழாகிவிட் டேனே, மகா பாவி யாகிவிட்டேனே! அம்மா! அம்மா! என் செல் வக் கண்ணே! பாரதீ......உங்களை விட்டேன். கைவிட்டேன். நட் டாத்தில்—நடுக் கடலில் தவிக்கவிட்டேன். என் போல பாவிகள்... ......ஆம்...ஆம்......உலகிலில்லை......

ராஜசேகரா! என் தாயாருக்கு நீதான் புதல்வன். என் சகோ தரியையும் தாயாரையும் காப்பாற்றுகிறாயா! அவர்களைத் தேறுதல் கூறிக் காப்பாற்றுவாயா! நடுத் தெருவில் பாவி விட்டானே என்ற வசைச் சொல்லை மறைத்து ஆதரிக்கிறாயா? நண்பா! உங்களை எல் லாம் பிரியுங் காலம் வந்துவிட்டது. ஹா...ஏன் என்னை இப்படிச் செய்கிறது? இருட்டிவிட்டது. இருட்டில் இராக்காலத்தில் சூரியன் எப்படிக் காய்கிறான். வெளிச்சம், வெளிச்சம்." என்று தாறுமா றாகப் பேச வாரம்பித்துவிட்டான்.

இதைக் கேட்ட எத்தகைய கல்லுதான் கரைந்துருகாது. ஐயோ! தெளிவாகப் பேசினவனுக்குத் திடீரென்று புத்தி மாறுடி விட்டதே! தாறுமாறுகப் பேசுகிறுனே என்கிற திகில் பிடித்துக் கொண்டது, அதே சமயம் பாரதி! "அம்மா! இங்குவா. அண்ண னின் பக்கத்திலாவது இன்னும் அவனுயிர் இருக்கும் சொல்ப நேரம் உட்கார்ந்திரு." என்று அழைத்தாள். தாயாரைக் காணவில்லை. விசனத்திஞல் மூர்ச்சை யாகிவிட்டாளோ என்று உள்ளே சென்று பார்த்தாள்.

உள்ளே விளக்கே இல்லை. நள்ளிருள் கப்பிக் கொண்டிருந்தது. "அம்மா! அம்மா!" என்று கூவிக்கொண்டே உள்ளே செல்கையில் கையில் ஏதோ தட்டுபட்டது. திடுக்கிட்டபடி "ஐயா! சற்று விளக்குக் கொண்டுவாருங்கள். ஏதோ இங்கு பயங்கரமாக விருக் கிறது." என்று கூவினுள். உடனே ராஜசேகரன் விளக்கை எடுத் துக்கொண்டு ஓடினுன். அந்தோ! பரிதாபக் காட்சியின் கோரத்தை என்னென்பது? இவளுடைய தாயார் தூக்கிட்டுக் கொண்டிருப்பதை யும் நாக்கும் விழியும் வெளியில் பிதுங்கித் தொங்குவதையும் கண்டு தீயை மிதித்தவர்கள்போல துள்ளிக் குதித்து 'ஐயையோ! மோசமே! படுமோசமே! அம்மா! நீயுமா இவ்விதம் சோதிக்கவேண்டும்," என்று பாரதி கதறியவாறு, இருவரும் கட்டை யவிழ்த்து அவளைக் கீழே கிடத்திஞர்கள்.

இதற்குள் ஒருவர் ஓடி வைத்தியரை அழைத்து வந்தார். வைத்தியர் வந்து சிகிச்சை செய்தார். இனி என்ன செய்து என்ன பயன்? அந்த அம்மாளின் உயிர் என்னவோ பறந்து போய் விட்டது. "உலகமெல்லாம் போற்றும் உத்தம மகன் உலகத்தை விட்டு மறைந்த பிறகு நான் உயிருடன் வாழ வேண்டுமோ! இதோ என்னையே முதலில் மாய்த்துக் கொள்ளுகிறேன்." என்று ஒரு கடிதத்தில் எழுதி அங்கு கீழே போட்டிருந்ததை டாக்டரே கண் டெடுத்தார். அதைப் படித்ததும் விஷயம் எல்லோருக்கும் தெட் டென விளங்கிவிட்டது.

ஹா! பாரதியின் மன நிலைமையைக் கூறவேண்டுமோ? தமய னின் நிலைமையைக் காண கதறி யழவும் அதிக பயங்கரமாக யிருக்

கிறது. இந்த சந்தர்ப்பத்தில் இச் செய்தி அண்ணனுக்குத் தெரியாம லிருக்க வேண்டுமே என்று பயந்தாள். அந்தோ! அலை காற்றில் கொந்தளிக்கும் கடலில் அகப்பட்டுக்கொண்ட மரக்கலத்தைப் போல பாரதியின் நிலைமை யிருக்கிறது. அம்மா! வென்று வாய் விட்டுக் கதற இடமுமில்லை; சமயமும் இல்லை. உயிரற்ற சவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் உயிரிருக்கிறதா, இல்லையா என்ற நிலைமையிலிருக்கும் மாசிலாமணியின் கதி என்னவாகும்?

அயோமயமான நிலைமையில் தத்தளித்து "அம்மா! என்னருமைத் தாயே! உன் மனம் எப்படித் துணிந்ததோ! கடவுள் கிருபையினால் அண்ணன் பிழைக்கக்கூடாதா? இதற்குள் நீ இவ்விதமான கோர சம்பவத்தைச் செய்துகொண்டு என்னை நடுச் சந்தியில் விட்டு விட்டாயே! என்னை எத்தனையோ அருமையாக வளர்த்துக் கடைசியில் அனாதையிலும் அனாதையாகத் தவிக்க விட உன் மனம் எப்படியம்மா துணிந்தது? ஐயோ! இனி என் கதி அதோகதி யாகிவிட்டதே! நான் யாரை அம்மா வென்று அழைப்பேன். என்னைப் பாதுகாக்க இனி யாரிருக்கிறார்கள். பேயானாலும் தாய் என்பார்களே! நான் இந்த நிமிடம் வரையில் தாயிருப்பதாக அகமகிழ்ந்து ஆகாயக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தேனே. எனக்கு அப்பாக்கியம் இல்லாது போய்விட்டதே! அம்மா! அம்மா! என்னருமைத் தாயே!

இனி என் பிழைப்பு அபாயத்திலும் அபாயமாக நேர்ந்து விட்டதே. யார் யார் என்னென்ன பேசுவார்களோ! என்ன பழியைத் தலையில் சுமத்துவார்களோ! என் இளைக்காரத்தையறிந்து என்ன பாடு படுத்துவார்களோ! என் தாயே! என் கண்ணான அன்னாய்! என்னைக் கதறவிட்டுச் செல்வது நீதியா, முறையா? நான் என் செய்வேன்? என் தாயே!" என்று புறக்கடையில் சென்று கதறுகிறாள். சுவருடன் முட்டிக் கொள்கிறாள். பித்துப் பிடித்தவள்போல தத்தளிக்கின்றாள். நிலை தடுமாறித் துள்ளி விழுந்து அழுகிறாள்.

அங்குள்ள அத்தனை ஜனங்களும் கண்ணீர் வடிக்கிறார்கள். ராஜசேகரன் மனத்தில் பெரும் இடி விழுந்து விட்டது. அந்த அம்மாள் தற்கொலை செய்து கொண்டதற்கும் நான் தான் காரணம் என்கிற எண்ணம் உண்டாகிவிட்டது. தான் ஏதோ பெருங் கொலைகாரனாக மனத்தில் எண்ணிவிட்டான். அவனை யறியாத வேதனையும் கலக்கமும் அபாரமாகப் பெருகி வதைக்கின்றது. மாசிலாமணி கூறியது முதல் இவனைச் சித்திரவதைச் செய்தது இன்னும் அதிகரித்து விட்டது. பாரதி கண்ணீர் பெருகிக் கதறுவதைப் பார்த்ததும் அவனால் சகிக்க முடியவில்லை.

5

பாரதி கதறுமிடத்திற்கு ஓடினுன். அவள் அருகில் சென்று "அம்மணி! தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள் இவ்விதம் வருந்த லாகுமா? மாசிலாமணியைக் கவனிக்க வேண்டாமா? மாசிலாமணி யின் கோரிக்கைப்படி கடவுளின்மீது ஆணையாக என்னுயிர் இருக் கும் பரியந்தம் நான் தங்களையும் தங்கள் குடும்பத்தையும் காப்பாற்று கிறேன்; இது சத்தியம். தாங்கள் பிரலாபிக்கும் விஷயங்களெல்லாம் என் மனத்தைத் துளைக்கின்றன; வதை செய்கின்றன. சுகத்தையும் துக்கத்தையும் சமமாக அனுபவிக்கவே நாம் ஜென்மம் எடுத்திருக் கிறோம். இதை மறக்கலாமா! அம்மணி! கடவுளின் சோதனை இது. பூர்வ கர்மாவின் லீலை இது. ஆக்குவதும், அழிப்பதும், அணைப்பதும், ஆதரிப்பதும் யாவும் அவன் செயலல்லவா?

அம்மணி! வேண்டாம்; புலம்ப வேண்டாம். எழுந்திருங்கள். என் தாயைப் பறி கொடுத்த மாபாவியாகிய நான் தாயின் பிரி வாற்றுத் துயரத்தை நன்கறிவேன். இப்போது முதலில் கவனிக்க வேண்டியது மாசிலாமணியைத்தான். தாங்கள் தெளியுங்கள். மனந் தேறுங்கள். அம்மணி! இப் பாவியை நம்புங்கள். இது சத்தியம். நான்தான் இத் துயரத்திற் கெல்லாம் காரணம் என்பது என் மனச் சாட்சியே கூறுகிறது. அதனுல் நான் படும் பாடு கூறத் திறமன்று. நான் தத்தளிக்கின்றேன். எழுந்து வாருங்கள். ஐயோ! இப்படி முட் டிக்கொண்டால் மண்டை உடைந்து விடாதா? அம்மணி! எழுந் திருங்கள்'' என்று தானே தேறுதல் கூறி, அவளைத் தூக்கி மெல்ல நடத்திக்கொண்டு வந்து தாயாரின் சவத்தருகில் விட்டான்.

பாரதி தாயின்மீது விழுந்து புரண்டாள். இனி என்ன செய்ய முடியும்? அந்த அம்மாளின் கடிதத்தைக் கொண்டே அவள் தற் கொலை செய்துகொண்டதை நிரூபித்து போலீஸாரின் உபத்திர வங்களை நீக்கிக் கொண்டார்கள். அதிக ஆடம்பரம் ஏதுமின்றிச் சவத்தை எல்லோரும் சேர்ந்து அடக்கஞ் செய்துவிட்டார்கள். மாசிலாமணியைப் பற்றி இதுவரையில் யாரும் கவனிக்கவே இல்லை. இந்த அலங்கோலத்திலேயே இருந்து விட்டார்கள். இடையில் இடையில் வந்து பார்த்துச் சென்றுர்கள். அவன் ஒரே நிலைமையில் படுத்திருந்தான்.

தாயார் என்றுல் அன்பில்லாத பொருளும் உலகத்தில் உண்டா! அத்தகைய தாயினிடத்தில் அதிக வாஞ்சையுடைய மாசிலாமணி தாயாரை விட்டுப் பிரிய இஷ்டமில்லாமலும், தாயார் தன்னைப் பிரிய வருந்துவதாலும் வெளி நாடுகளுக்குப் பந்தாடுவதற் குக் கூப்பிட்டால் கூடச் செல்ல மறுத்துவிடுவான். கப்பலேறிச்

செல்வதென்றால் தாயார் பயந்தாள். தனக்கு வரவிருக்கும் பெரிய புகழையும் கீர்த்தியையுங் கூடப் பெரியதாக நினைக்காமல் தாயின் அன்பு ஒன்றே பிரதானம் என்றும், அதற்கு நிகர் மற்ற புகழ்கள் இல்லை என்றும் கருதித் தாயைப் போஷித்து வந்த உத்தம தனயனுக்கு அத்தகைய உயரிய தாயார் தன் பொருட்டு உயிர் நீத்தாள் என்பதை யறியச் சக்தியற்றுவிட்டது.

சற்று நினைவு தெரிந்த நிலைமையில் இருப்பானேயானால் அவனை அடக்கிப் பிடிக்க முடியுமா? தன்னுயிரையும் கூடத் தியாகம் செய்துவிடுவான். இப்போது தாயார் என்ன கதியானாள் என்பதை யறியாத நிலையில் கண்ராவியாகப் படுத்திருக்கிறான். பாரதியோ தன் விசனத்தை எல்லாம் அடக்கிக்கொண்டு, இனிமேல் இவன் கண் விழித்தால் போதும் என்ற எண்ணத்துடன் அருகிலேயே உட்கார்ந்திருந்தாள்.

ராஜசேகரனும் அவ்விடத்தை விட்டுச் செல்லவில்லை. அந்த அம்மாளின் கிரியைகள் நடக்கத் தானே உதவி செய்ததுடன் பாரதியின் விசனத்திற்குத் தேறுதல் கூறியபடியே மாசிலாமணியின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறான். நாட்கள் நான்கைந்து சென்று மறைந்தன. ஜுரமும் குறையவில்லை. கண் திறந்து பார்த்துப் பேசவுமில்லை. ஒரு தினம் ராஜசேகரனுக்கு வெளியூர் டீமுடன் பந்தாடுவதற்கு வரவேண்டுமென்ற தந்தி கிடைத்தது. தந்தி யடித்திருப்பவர்கள் மிகவும் முக்கியமான மனிதர்கள். அவர்களின் உதவியினாலேயே இவன் படித்து முன்னுக்கு வர முடிந்தது. ஆகையினால் அவர்களுடைய வார்த்தையைத் தட்டக்கூடாத நிலையில் இருக்கிறான்.

இங்குள்ள நிலைமையோ, கூறச் சாத்யமன்று. மாசிலாமணி கண்ணைத் திறக்கவில்லை. "எந்த கதியாகுமோ அதையும் நம்புதற்கில்லை. தாயார் இறந்த துயரத்தால் தத்தளிக்கும் பாரதி இச் சமயத்தில் தானும் என்ன செய்துகொள்வாளோ? "என்கிற பயம் வேறு பாதிக்கிறது. அது எப்படி இருப்பினும் தந்தியை மறுக்கக்கூடாது. என்ன செய்வான் பாவம். பாரதியை நோக்கி "அம்மணீ! இதோ இத் தந்தியைப் பாருங்கள். நான் யாரோ; மாசிலாமணி யாரோ; நாங்களிருவரும் அன்னியர்களாக விருந்தபோதிலும் அன்றைய சம்பவத்திற்குப் பிறகு என்னை யறியாது மாறுதலும் கலக்கமும் உண்டாகி என்னையே வதை செய்ய வாரம்பித்து விட்டதால் நான் அன்னியன் என்றதையே மறந்து அவனை என் சொந்த சகோதரன் போலவே பாவித்துவிட்டேன். ஆதலால்தான் நான் ஒரிடத்திலும்

ஒரு நாளும் தங்கி யறியாதவன் இங்கு இத்தனை நாட்கள் நின்று விடும்படி என் மனம் தூண்டியது. இனி இதை என்னுயுட்காலம் வரையில் மறக்க முடியாது.

அம்மணீ! நான் தங்களைப் பணிவுடன் மன்றாடி ஒரு விஷயம் கேட்கப் போகின்றேன். தாங்கள் தவறாது வாக்களிக்க வேண்டும். நான் இப்படிக் கேட்பதைப் பற்றி வித்யாசமாக நினைக்கவேண்டாம். நான் இந்தத் தந்திக்கு மறுப்பு கொடாமல் கட்டாயம் போய்த் தீர வேண்டும். தாங்கள் தற்போ திருக்கும் நிலைமையில் தாங்களும் தங்கள் தாயார் போல ஏதேனும் செய்துகொண்டு விடுவீர்களோ என்கிற பெருங் கவலை என்னை வதைக்கின்றது. என் பொருட்டாக ஒரு உயிர் மறைந்துவிட்ட பாதகம் ஒன்று எனக்குப் போதும். தாங்கள் எக்காரணம் பற்றியும் எவ்விதமான கோர சம்பவமும் செய்துகொள்வதில்லை என்று எனக்குத் தயவு செய்து சத்தியஞ் செய்துத் தரவேண்டும். இதுதான் நான் கோரும் கோரிக்கையாகும். தாயே! தயை செய்யவேண்டும்,'' என்று வெகுவாய் கெஞ்சிக் கேட்டான்.

இது கேட்ட பாரதி கண்ணீர் பெருகியவாறு "ஐயா! தாங்கள் என்ன விஷயம் கேட்கப் போகிறீர்களோ வென்று நினைத்தேன். உம். இனி இப் பாழுங் கட்டைக்குக் காப்பு ஒன்று வேண்டுமா! என் னருமை அன்னையை இழந்தாயிற்று. அண்ணனின் நிலைமையோ, ஆழி மத்தியில் அலையும் மரக்கலம் போன்றிருக்கிறது. அவனும் என்னைத் தனியே தவிக்க விட்டுச் செல்வானே யானால் நான் பூமியில் வாழவும் வேண்டுமா! ஐயோ! வெட்கக்கேடு என் விதியை நினைக்க அங்கம் அனலாக எரிகிறதே. ஐயா! இப் பாவியின் உயிருக்காக ஒருவித மான பந்தமும் வேண்டாம். மகா பாவி உலகை விட்டு மறைந்தாலும் நலமே,'' என்று கூறி முடிப்பதற்குள் ராஜசேகரன் இடைமறுத்து,

"அம்மணீ! தாங்கள் கூறுவதைப் பார்த்தால் பயங்கரமான விஷப்பரீக்ஷையைப் போலிருக்கிறதே. தாங்கள் அப்படிச் சொல்ல லாகாது. இத்தருணத்தில் தங்களுடைய மனத்திற்கு இவ்வாறு தோன்றுவது சகஜம். ஆனால் தற்கொலையின் விபரீத ஆபத்தை யோசித்தால் விளங்கும். இக்காரியம் செய்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்தால் தான் நான் நிம்மதியாகப் போக முடியும். இல்லை யேல் நல்ல இடமாயினும் பொல்லாப்பை யடைகிறேன். வரமுடியா தென்று எழுதி விடுகிறேன். இந்த நிலைமையில் நான் செல்ல மனம் வரவில்லை. அதிலும் மற்றொரு பாவத்தைக் கட்டிக்கொள்ள சம் மதிக்க மாட்டேன். உங்கள் அண்ணனுக்கு வாக்குக் கொடுத்ததை

நான் நிறை வேற்றும் பாக்கியத்தை எனக்களிக்க வேண்டாமா? அதற்காக எனக்கு நீங்கள் வாக்குக் கொடுத்தே தீரவேண்டும்'' என்று கட்டாயஞ் செய்து கேட்டான்.

அதற்கு பாரதி "ஐயா! என் விஷயத்தில் அன்பு காட்ட விரும்புவோர்கள் இவ்விருவரே என்று எண்ணினேன். மூன்றாவதாகத் தாங்களிருப்பதை அறிய சந்தோஷமே எனினும், என் மனோ நிலைமையின் தவிப்பை எடுத்துக் கூற முடியவில்லை. தாங்கள் கெஞ்சிக் கேட்பதால் என் அண்ணனின் உயிர் இருக்கும் வரையில் என்னுயிருக்கும் பயமில்லை. அவன் உயிர் நீங்குமாயின் நீங்கள் எங்கிருப்பினும் உடனே தங்களுக்குத் தெரியப் படுத்துகிறேன். பிறகு என்னுருகுமோ சொல்ல முடியாது. இதற்குமேல் என்னை பலவந்தஞ் செய்ய வேண்டாம். இதுதான் என்னுடைய கடைசீ தீர்மானம். இதைவிட உறுதி கொடுக்க எனக்குச் சக்தியில்லை; மனமுமில்லை; தெம்புமில்லை. தாங்கள் மகா அறிவாளியாகையினால் அதிகம் கூற வேண்டியதில்லை.'' என்று சுருங்கக்கூறி விளங்க முடித்து விட்டாள்.

அதற்குப் பின் ராஜசேகரன் அதிகமாகத் தொந்தரவு செய்ய முடியவில்லை. "மாசிலாமணீ! மாசிலாமணீ!'' என்று கண்ணீர்வடியக் கூப்பிட்டான். பதிலே இல்லை. அவனைத் தடவிக் கொடுத்தான். "அம்மணீ! நான் சென்று வருகிறேன். தாங்கள் ஜாக்ரதையாகக் கவனித்துக் கொள்ளுங்கள். நான் சென்று முடிந்தால் ஆடுவேன். இல்லையேல் எனது நிலைமையைச் சொல்லிவிட்டு உடனே வந்துவிடுகிறேன். தாங்கள் தைரியமாக இருங்கள், நான் சென்று வரட்டுமா?'' என்று கேட்டான்.

பாரதி விசனத்துடன் "ஐயா! சென்று ஜெயம் பெற்று வாருங்கள். என் அண்ணனுக்குச் சீக்கிரம் குணமாகும்படி கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். இதைவிட வேறு என்ன செய்ய முடியும்?'' என்று கூறியபடியே எழுந்து நின்று வணங்கினாள். ராஜசேகரனுக்கோ, செல்வதற்கும் மனமில்லை; எனினும் அதையும் தட்டமுடியாததலால் அரை மனதுடன் விடைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டான். தான் உடனே வருவதாக ஸ்டேஷனிலிருந்து ஒரு தந்தி கொடுத்துவிட்டு ரயிலேறினான். ரயிலோ அவனை வெகு வேகமாக வெளியில் இழுத்துச் செல்கின்றது. மனமோ அதைவிட காற்று வேகமாக முன்னிருந்த இடத்திற்கே இப்படி இழுக்கிறது. இவ்விருவகையிலும் போராடிக்கொண்டே செல்கிறான்.

பாரதியோ நிமிடத்திற்கு நிமிடம் தன் அண்ணனையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். குணமென்பதே காணப்படவில்லை. கவலை

யுடன் அல்லும் பகலும் அருகிலேயே இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறாள். தன்னந்தனியாகத்தான் உட்கார்ந்திருக்கும் துக்கம் அவளால் தாங்கவே முடியவில்லை. புலம்பிக் கொண்டே உட்கார்ந்திருக்கையில் படுத்திருந்த மணி திடீரென்று மதயானையின் பலங் கொண்டு படுக்கையிலிருந்து திமிறிக்கொண்டு எழுந்து குதித்து ஓட வாரம்பித்தான். இந்த விபரீத செய்கைக்கண்டு அலறி நடுங்கிவிட்ட பாரதி "ஐயையோ! அண்ணா! அண்ணா! எங்கே போகிறாய்? சற்று பிடியுங்கள். அதோ ஓடுகிறான். பிடியுங்கள் பிடியுங்கள் என்று கத்திக் கதறியவாறு தலைவிரி கோலமாக அவனைத் துரத்திக் கொண்டு ஓடுகிறாள். இதைக்கண்ட மற்றவர்கள் ப்ரமித்து நின்று விட்டார்கள்.

---

## 4-வது அதிகாரம்

## சோதனை! சோதனை!! ஈசனின் சோதனை!!!

உலகத்திலுள்ள பஞ்சமா பாதகங்களில் மிக மிகக் கொடியதான த்ரோகமும், பெண்வதையும், மோசமும் கபடமும் செய்து கள்ளக் காதல் கொண்டு கபட நாடகம் நடித்துக் கற்பழித்துக் கலங்கச் செய்த கல்லினும் கொடிய கடின இருதயத்தையுடைய கயவன் பொன்னுசாமியின் கண்களில் தீப்பொறி பறக்கின்றது. செய்வது தெரியாது விழிக்கின்றான்.

தான் இங்கு பெரிய இடத்தைப் பிடித்துப் பணத்தைக் கறந்து குடித்து மாயாஜாலம் செய்ய நினைத்தது முடிவடைவதற்குள்ளேயே மண் விழுந்து விட்டதே! என்ன செய்வது என்று திரு திரு வென விழித்தவாறு அவ்விடத்தை விட்டு மெல்ல நழுவப் பார்த்தான். இதை யறிந்த காமு "அம்மா! இவன் ஓடி மறையப் பார்க்கிறான். திருடனில் பக்காத் திருடன் இவன். இவனைப் பிடியுங்கள் ஓடப்பார்க்கிறான்" என்று கத்தினாள்.

அங்கு நிற்கும் அவ்வனிதைக்குக் கதி கலங்கிவிட்டது. தன் தாய் தந்தையரை ஏறெடுத்துப் பரிதாபத்துடன் பார்க்கிறாள்.

பொன்னுசாமியை நோக்கி "மாயஜால மந்திரக்காரரே! இந்நிமிடம் வரையில் நீர் ஓர் சாக்கடைப் புழுகு என்பதை மறைத்துப் பரிமள மலர் போல நடித்து வந்து என்னையும் பாழ் படு குழியில் தள்ள நினைத்தது போதும். யோக்யதையற்ற உம்மை நம்பிய என் மூளையைச் செருப்பாலடிக்க வேண்டும். எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தது போதும். என்னிடம் பணத்தைக் கறந்து குடித்ததும் போதும். கடைசியில் என்னையே விழுங்கும் பூதமாக அமைய நேர்ந்த தருணம், இம்மாதரசி என் பங்கிலிருந்து காத்தாள்.

ஆகா! த்ரோகம் செய்து குடியைக் கெடுப்பதற்காகவே நீ ஜெனித்தாயா? சீச்சி! இத்தகைய மோசக்கார ஆடவர்களை நம்பவே கூடாது. அப்பப்பா! எத்தனை யோக்கியன் போலப் பசப்பிய பேச்சு. என்ன தளுக்கு. உலகமே எனக்குத் தெரியாதென்றும் நான் பரிசுத்தமான வாலிபன் என்றும் கூறினையே! அதன் பவிஷு இப்போது தெரிந்து விட்டதல்லவா? ஐயோ பாவம்! இம் மங்கையின் கதி இனி என்ன வாகும். துராத்மாவே! படிப்பு சொல்வது போலச் சொல்லி விவாகத்திற்கு வழி தேடப் பார்த்தாயல்லவா! ஆஹா! அந்தப் பயங்கரத்திலிருந்து தப்பினேனே!" என்று படபடத்துக் கூறினள்.

இதற்குள் அவளுடைய தாயார் அபாரமான அவமானத்துடனும் விசனத்துடனும் தன் மகளைப் பிடித்து இழுத்து, இப்புறம் நிறுத்தி "பாலா! பேசாமலிரு. போதும் உனது கோபம். பேயாயினும் தாய்! தாய் சொல்துறந்தோரு வாசகமில்லை. என்ற வாக்கியங்களைப் படித்தும் மறந்து, புது நாகரிக மயக்கத்திற்கு அடிமையானதன் பலன் இது. 'ஸ்திரீகளையே ப்ரைவேட்டு சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்து கொள்ளு' என்று நான் கூறியதற்குத் தந்தையும் மகளும் ஒரே பிடிவாதமும், புத்திசாலித்தனமும் கொண்டு புருஷ வாத்தியார்கள் தான் நன்றாகச் சொல்லிக் கொடுப்பார்கள். பெண்களுக்கு அவ்வளவு போதாது; சீக்கிரம் வராது என்றெல்லாம் கோட்டை கட்டினீர்கள்.

பெண்களுக்கு சொல்லிக் கொடுக்கத் திறமை இல்லாமல் தான் ஆயிரக்கணக்கான ஸ்திரீ ரத்தினங்கள் படித்து ஒவ்வொரு வேலையிலும் திறமையுடன் விளங்குகின்றார்களா! அவர்களெல்லாம் பள்ளிக்கூட உபாத்யாயராக இல்லையா? அவர்களிடம் படித்த மாணவிகள் முன்னுக்கு வர வில்லையா! ஸ்திரீகளுக்குத் திறமையில்லை என்றால் உன்னைப் படிக்க வைப்பதும் வீண்தானே! எக் காரியத்திலும் பல துறைகளிலும் அபிவிருத்தி யடைந்து வரும் ஸ்திரீ ரத்தினங்கள் நிறைந்த இக் காலத்தில் இவ்விதமும் சொல்வாருண்டா?

நான் வேண்டுமாயின் மூடம், நான் படிக்காதஅசடாயினும் படித்த வர்களின் நன்மை தீமைகளை அறியும் சக்திகூடவா இல்லாது போயி ற்று. ஆகையினால் ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுங்கள். புருஷ தடியன் வேண்டாம். அவர்களில் சுத்தமான இருதயத்துடன் ஸ்திரீகளிடம் பழகும் உத்தமன் நூற்றுக் கொருவர் கிடைப்பதும் அரிது. கபட த்தை உள்ளே வைத்துக்கொண்டு வெகு யோக்கியர் போல நடித்து உயிரினும் சிறந்த கற்புக்கே உலை தேடிவிடுவார்கள். பெண்ணின் கற்பு கெடுவதற்குப் பாதி காரணம் வேஷக்காரப் பாவிகளான ஆடவர்கள் தான். அவர்களுடைய மயக்குவேஷ வலையில் மதி கெட்டு, பெண்கள் விழுந்து கெட்டுவிடுவதால் பட்டிக்காட்டினரும் என் போலப் படி யாதவர்களும், "படித்துவிட்ட பெண்கள் கெட்டு விடுகிறார்கள். படிப்பே எமனாகிவிடுகிறது. அதறியாத பெண்களே தேவலை," என்று கூறித் திட்டுகிறார்கள்.

படித்த படிப்புக்கு வேண்டியபடி அறிவையும், உத்தம வாழ்க் கையையும், நீதியான நடத்தையையும் கற்றுக்கொண்டு அதன்படி நடக்கும் உத்தமிகள் ஆயிரக் கணக்கில் இல்லையா? இப்படி எவரே னும் ஒரு பெண்மணி B. A. யும் L. T. யும் படித்துவிட்டு புத்தி கெட்டுப் பாழாகிவிட்டால் எல்லா படித்த சமூகத்தையும் அது பாதிக்கின்றது. போதும் உங்கள் யோசனை என்று நான் ஆதியி லேயே படித்துப் படித்துக் கூறவில்லையா! என்னை வெகு அலக்ஷிய மாகத் தூக்கி எறிந்து பேசி கலங்கச் செய்துவிட்டு இப் பாதகனை வெகு யோக்யனென்று நம்பி இங்கு சேர்த்துவிட்டீர்கள். அதன் பலனும் கைமேல் சித்தித்துவிட்டது.

ஐயோ! போதும், வெட்கம், வெட்கம். என் மானம் போகிறது. முதலில் இவ்விருவரையும் வீட்டை விட்டு விரட்டுங்கள். இதில் நாம் தலையிட்டுக் கொண்டால் இந்த வெட்கக் கேடான விஷயம் ஊர் முழுதும் தெரிந்துபோய் நம்மைச் சந்தி சிரிக்க வைத்துவிடும். இம் மட்டுடன் புத்தி வரட்டும்," என்று அதிக ஆத்திரத்துடன் கூறினாள்.

இதற்கு பாலா எவ்விதமான பதிலும் பேசாது தலை குனிந்த வாறு நேரே உள்ளே போய்விட்டாள். அவளுடைய பிதாவுக்கு உண்டான ஆத்திரத்திற்கு எல்லையே இல்லை. படிக்காத தன் மனை விக்கிருந்த பார யோசனையும், புத்திசாலித்தனமும் தனக்கில்லாது போய்விட்டதைப் பற்றி வெட்கி வருந்தினார். தாக்ஷிண்ய மின்றி அந்தப் பொன்னுசாமியின் கன்னத்திலும், முதுகிலும் தடார் புடார் என்று பல அறைகளை அறைந்து, கழுத்தைப் பிடித்து நெட்டித்

தள்ளிக்கொண்டே "அடே படவாப் பயலே! துன்மார்க்கப் பதரே! என் குடும்பத்தின் கவுரவத்திற்கும், மானத்திற்கும் அஞ்சி உன்னை நான் மேற்படி நடவடிக்கை எதுவும் எடுத்துக்கொள்ளாது விட்டு விடுகிறேன். இனிமேல் இப்படிப்பட்ட மானங் கெட்ட வாழ்க்கையை நடத்தாதே! என்னுடைய செயினையும், வாட்சையும் களவாடியபோதே உன்னை நான் திருடனென்று விலக்கி இருக்க வேண்டும். தென்னை மரத்தில் ஏறிய கள்ளனைப் போல பதில் உரைத்தாய். போனால் போகிறதென்று மறந்தேன்; மன்னித்தேன். ஓடு கழுதே! வாயைத் திறப்பாயானால் உன்னை ஹதம் செய்துவிடுவேன்," என்று புறக்கடை வழியாகக் கொண்டு போய் வீதியில் விட்டு விட்டு வந்தார்......

இங்கு, தலைவிரி கோலமாக உட்கார்ந்திருக்கும் காமுவை நோக்கி "அம்மா! நீ படித்தவளாகத் தெரிகிறது. இருப்பினும் உன் புத்தி கெட்டதனாலேயே உன் கதியும் விதியும் இப்படியாயிற்று. எத்தனைதான் படித்துவிட்டோம் என்கிற பெருமையும் கர்வமும் இருப்பினும் தன்னடக்கமும் நாணயமும் நெறியும் பிசகி நடக்கலாகாது. அவன் என்ன விருப்பினும் ஆண் பிள்ளையல்லவா; அவனிடம் எம்மட்டும் நீதியோடும் வரம்போடு மிருக்கவேண்டுமோ அம்மட்டோடு இருந்தால் இப்படி அதோகதியாகி இருக்காதல்லவா! கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போலப் பயனற்று விட்டது. இனியாவது புத்திசாலியாகப் பிழைத்துக்கொள். நீ உடனே இங்கிருந்து போய்விடு. எங்களுக்கு அவமானமா யிருக்கிறது. இவ் விஷயத்தைக் கூடியமட்டும் வெளியில் தெரியாது மறைத்துவிட்டால்தான் எங்கள் மானம் தங்கும். ஆகையினால் தயவு செய்து நீயும் வெளியில் கூறாதே, நாங்களும் உன் விஷயத்தைக் கூறவில்லை. நீ எழுந்து போய்விடு," என்று பாலாவின் தாய் தந்தையர்கள் கண்டிப்பாய்க் கூறிவிட்டார்கள்.

அந்தோ! பரிதாபம்! காமுவின் தற்போதைய நிலைமை எப்படி இருக்கும்? கண்ணீர் ஆறாய் ஓடுகின்றது. தேகம் முற்றும் தத்தளித்து தக தக வென்று எரிகிற வேதனையையடைகின்றது. தாங்க மாட்டாத விசனத்துடன் எழுந்து "பெரியீர்காள்! தாங்கள் கூறிய யாவும் நியாயமே யாகும். நான் எத்தனை படித்தும் என் சொந்த புத்தி யில்லாததால் தலையில் நானே பாறையைப் புரட்டிக் கொண்டேன். இப்பாதகன் என்னைச் செய்த சண்டாளத்தனம் போதும். இந்த இடத்திலும் அவ்வாறு ஆய்விடபோகிறதேயென்று தான் நான் என் ரகஸியத்தையும் வெளியிட்டேன்; அவன் பவிஷையும் ஆற்றினேன். வரம்பு மீறியதன் பலன் கண்டு விட்டேன். பெரியோர்கள் விவாக

மென்ற கட்டுப்பாட்டை வைத்திருப்பதன் நன்மை இப்போதல்லவா தெரிகிறது. இனி என் கதி என்ன வாயிற்று? ஆற்றிற்கோ குளத்திற்கோ அர்ப்பணமாவதைத் தவிர வேறு இல்லை, என்று கண்ணீருடன் கூறிக் கொண்டே எழுந்து வந்துவிட்டாள்.

பெண்ணைக் காணவில்லையே என்னவோ, ஏதோ என்று கண்ணீர்விட்டுக் கொண்டு எதிர் பார்த்திருந்த விசாலம் இவளைக் கண்டதும் "எங்கே போனாய்?" என்று கேட்டாள். காமு நடந்த சகல விஷயங்களையுங் கூறிப் புலம்பினாள். தாயார் கண்டித்துத் திட்டி மனத்தை புண்படுத்துவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். வாயைத் திறக்காது சென்று விதியை எண்ணிப் படுத்துவிட்டாள்.

தூக்கு தண்டனை அடைந்தவன் தூக்கு மேடை ஏறும் தினம் நெருங்க நெருங்க என்ன வேதனை யடைந்து தன் பயங்கரச் செய்கையையும், தூக்குமரத்தில் தொங்கப் போகும் விஷயத்தையும் எண்ணி தவித்துருகுவானோ அதே போல காமுவுக்கு நாள் ஏற ஏற அவளை திகிலும், பயங்கரமும், எதிர் காலத்தின் விபரீதத் தோற்றமும் ஒன்று கூடிப் பாணங்களைப் போலத் தாக்குகின்றன. வழியோ ஒன்றுந் தெரியவில்லை. நாளுக்கு நாள் தன்னிலைமையோ, மிகவும் மாறுதலை யடைந்து எத்தகையோருக்கும் தன்னுடைய பயங்கரச் சின்னங்களைத் தெட்டன எடுத்து விளக்கிக் காட்டுவதுபோலாகிக் கொண்டு வருவதைப் பார்க்கப் பார்க்க அதி பயங்கரமும், தத்தளிப்பும் உண்டாயின.

சில மாதங்கள் சென்றன. அவளையும் அவள் விசனத்தையும் மீறி அவளுடைய சிறிய வயிறு பருத்து வெளியில் எழும்பி விட்டது. இந்தத் தோற்றம் அவளை முற்றிலும் கொலை செய்துப் பாதி உயிரையும் குடித்து விட்டதென்றே சொல்லவேண்டும்: "ஐயோ! இனி என்ன செய்வது சர்வேசா! என் முடிவை இவ்வித கோரமான தண்டனையிலா முடித்துவிட்டாய். ஐயோ! இவ் வெட்கக் கேட்டை இனி நான் எங்ஙனம் மறைக்கக்கூடும்? என்னையே நான் மறைத்துக் கொண்டால்தான் இனி என் விதியை மறைக்கலாம். அந்தோ! ஆதியில் படாத கஷ்டங்களை எல்லாம் என் பொருட்டு பட்டு, அருமையாய் வளர்த்த தாயாருக்கு என்னால் ஒரு கிஞ்சித் இன்பமும் இல்லாது துன்பமே கதியாக ஆய்விட்டதே. நான் நம்பி ஏமாந்ததை மட்டும் என் தாயார் எண்ணி இருக்கிறாளே யன்றி நான் இத்தகைய பயங்கரப் படுகுழியில் விழுந்து மீளாத நரகத்தி லிருக்கிறேன் என்று அறியமாட்டார்களே. விசனம், விசனம், என்று படுத்திருந்ததால் இதுவரையில் மறைக்க முடிந்தது. ஐயோ! இனி நான் இவ்

வேஷத்தை...இல்லே இல்லே. இக் கொடிய ஆபத்தை...எப்படி மறைக்க முடியும்? என்னுடைய இந் நிலேமையை என் தாயார் அறிந்தால், ஐயோ! என்ன செய்வார்களோ: என்ன கதியாகுமோ: என் விதி எப்படி முடியுமோ! என்ன செய்வேன்?

தாயாருக்குக் கூருமலேயே என்னே நான் முடித்துக்கொண்டு விடலா மென்ருல் அந்தோ! வயதான தள்ளாத நிலேமையில் இதைப் பார்த்ததும் அவள் பிராணனும் போய்விடுமல்லவா? அந்தக் கொலேக்கும் நானன்ருே எமன். என்ன செய்வேன்?'' என்று தத்தளித்தவாறு கட்டு மீறிய விசனத்துடன் உட்கார்ந்திருந்தாள். வேலே செய்து அலுத்துப் போய் விசாலம் வந்து சேர்ந்தாள்.

அவளேக் கண்டதும் காமு, தாளுகவே ஆவேசங் கொண்டவளேப் போல எழுந்து "அம்மா என் தாயே! ஆதிமுதல் ஒரு நிமிட நேரமாவது என்ளுல் நீ சுகப்படவில்லே. இன்ப மனுபவிக்கவில்லே. என்பொருட்டு நீ பட்ட கஷ்டமெல்லாவற்றையும் பாவி நானறிந்தும் இன்னும் பன்மடங்கு அதிகரித்த கஷ்டத்தை யடையவே சண்டாளி நான் ஏற்பட்டேன். அம்மா! என்ளுல் பிற்காலத்தில் நன்மை யடையலாம் என்று எண்ணி மனக் கோட்டை கட்டியல்லவா இந்த சிரமங்களேப் பட்டிருப்பாய். அந்தோ! நான் பரம பாதகியாகிவிட்டேனே! சண்டாளத்தையே உருக்கொண்டு உலகில் ஜெனித்தேனே! அம்மா! அம்மா! என்னருமை அம்மா! நான் உன்னிடமின்றி யாரிடம் முறையிடுவேன்? என் விதி என்னே பெரிய சோதனேயிலாழ்த்தி விட்டதே! அம்மா! என்னிலேமையை நீயே யூகித்தறிந்திருப்பாய் என்று நினேத்தேன். ஆளுல் அறியவில்லே என்றும் தெரிந்து கொண்டேன்.........அம்மா......இத்தகைய சின்னங்கள் உண்டாகிவிட்டன. என் அங்கம் பதறுகிறது. இதன் அனுபவ மறியாத நான் தத்தளிக்கின்றேன். இனி என்னேக் காண்போர் கட்டாயம் நான் ஒளிக்க முடியாமல் தெரிந்துகொள்ளும்படியான நிலேமை வந்துவிட்டது. தாயே! இனி நான் பூபாரமாக இருக்கச் சம்மதியேன். • என் பாவச் செயல் என்னுவியைப் பருகாது போகப் போவதில்லே. உன்னிடம் தெரிவிக்காமலேயே என்னே நான் மாய்த்துக் கொள்ள நினேத்தேன். ஆளுல் அது சரியாகத் தோன்ருமையினல் சொல்லிவிட்டேன்,'' என்று கூறி காலேப் பிடித்துக்கொண்டு புலம்பினுள்.

இந்த இடி யோசையைப் போன்ற வார்த்தையைக் கேட்ட விசாலம் "ஐயோ! மகளே! என் தலேயில் கல்லேப் போட்டாயோ! என் மனக் கோட்டையை இடித்து விட்டாயே: இம்மாதிரியான

ஆபத்துக்களும் வந்துவிட்டனவா: ஐயோ! என்ன செய்வேன்? பெரிய குடும்பத்தில் பிறந்து நாலு பேருக்குக் கண்ணியமாக காலத்தைக் கடத்தி வந்தேனே! என் மானமெல்லாம் போய்விட்டதே! வெளியில் தலை காட்ட முடியாத நிலைமை யாகிவிட்டதே! அப்போதே நான் கூறவில்லையா? அவனை நம்பாதே அவன் உன்னை யாதரிப்பது நிஜமானல் உடனே கல்யாணத்தைச் செய்து கொள்ளச் சொல்லு. வரம்போடு பழகு. குலத்தைக் கெடுத்து ஹானி தேடவேண்டாம், என்று கூறினேனே. அதைக் கேளாது மறுத்து அப் பாதகனை நம்பிவிட்டாயே: ஐயையோ! நம்மை நமது பந்துக்கள் ஆதரித்துபசரிக்காவிட்டாலும் "விசாலம் நல்ல கெட்டிக்காரி. நல்ல நடக்கையுடன் எப்படியோ பாடு பட்டுத் தன் குழந்தையை வளர்த்து முன்னுக்குக் கொண்டுவந்தாள். உத்தமி.'' என்று நாலு பேரிடம் மெச்சிப் பேசுகிறார்களே: அவர்களுக்கு இப் பயங்கரச் செய்தி தெரியுமாயின் காறியுமிழ்ந்து நம்மை அடியோடு ஜாதிக் கட்டல்லவா போடுவார்கள். இப்போது சாவு வாழ்வுக்கு நம்மை ஒரு பொருட்டாக அழைப்பதும் போய் ஊர் சிரிக்கலாய் விட்டதே! என்ன செய்வேன்? சதா வருந்தி யழுதுகொண்டு படுத்திருப்பதால் நான் உன்னைக் கவனிக்க முடியாது போய்விட்டது. இத்தகைய பேராபத்திற்கும் நீ இலக்காகி இருப்பாய் என்று நான் எண்ணவில்லையே! மகளே! நான் யாரிடம் முறையிடுவேன். வெளியில் கிளம்பினல் "இவள்தான் திருட்டுப் பிள்ளை பெற்றாளே அவள் தாயார்'' என்று என்னைக் கேலி செய்து நாக்கை வளைப்பார்களே: ஈச்வரா! ஜெனித்த காலம் முதல் இப்படி சோதிக்கவா என்னையொரு உருவமாக்கினாய்?

அந்தோ! உன் அப்பனும் சிறிய தாயாரும் இந்த நாட்டிற்குத் திரும்பி யிருப்பதாகச் சில தினங்களாய் ஒரு வதந்தி உலாவுகிறது. எனக்குப் பரம எதிரியான உன் சிற்றன்னைக்கு இச் செய்தி தெரியுமாயின் நம்மை வேண்டுமென்றே தெருவிலிழுத்து கைதட்ட வைப்பாளே: நான் என்ன செய்வேன்?'' என்று தலையிலடித்துக்கொண்டு கதறுகிறாள்; மூர்ச்சையாகி விடுவள் போலாய்விட்டது.

இந்நிலைமையில் தாமரையிலை நீர்த்துளி போலத் தத்தளிக்கும் காமு என்ன செய்வாள் பாவம்! "அம்மா! நான் செய்வது ஒன்றும் தெரியவில்லையே! என்னை ஏதோ சித்திரவதை செய்கிறதே! நான் என்ன செய்வேன்? தாயே! உனக்கு நான் ஒரு மகாபாவி பிறக்கவே இல்லை என்று எண்ணிவிடு. நீ மலடு, கொட்டு, பிள்ளை பெறாதவள் என்று நினைத்துக்கொள். என்னைப்பற்றிக் கவலையே கொள்ளாதே; நான் எனது மடத்தனத்தினல் சபைக்குதவாத பாவியாகிவிட்டேன்.

என்னை விட்டுவிடு. இனிமேல் என்னுசையை வைக்காதே'' என்று முகத்தில் கையை அறைந்துகொண்டு அழுதாள்.

இதைக் கேட்ட விசாலம் நெருப்பில் விழுந்த புழு வெனத் துடித்து ஐயோ! என் செல்வ மகளே! காமு, எத்தனை அருமையாக உன்னைப் பெற்று, ஆயிரம் பாடு பட்டு வளர்த்துக் கடைசியில் மறந்துவிடவும் உயிருடன் பறிகொடுக்கவும் என் மனம் துணியுமா? என் இருதயம் வெடித்துவிடும் போலிருக்கிறதே; அச் சண்டாளனே உன்னை கட்டித் துலைத்துக்கொண்டால் சற்று கவலை நீங்குமென்று நினைப்பதற்கும் மண் விழுந்துவிட்டதே! ஈசா! இனி செய்வதென்ன இருக்கிறது. என் குடியுங் கெட்டது. மானமும் அழிந்தது. பிழைப் பும் போச்சுது. இழிவான கதியும் வந்தது. காமு! எப்படியும் இதை வெளியார் அறியாது மூடி ஒருவிதமாகத் தீர்த்து விடத்தான் வேண்டும்.

இப்பாழும் ரகஸியம் எனக்குத் தெரிந்திருக்குமாயின் முதலி லேயே துலைத்திருக்கலாமே. இப்போது எத்தனை மாதங்களாகிற தென்றும் தெரியவில்லையே. மூடப்பெண்ணே! கட்டேலே போவான் களின் சகவாசத்தின் கொடுமை போதுமா! இதற்குத்தான் தகுந்த முறையில் பழகவேண்டும். மிஞ்சி போகக்கூடாது. யாரையும் நம்பக் கூடாது என்று பெரியார் கட்டுப்பாடு வைத்திருப்பதன் நன்மை இப்போது தெரிகிறதா? அப் படுபாவி கல்யாணம் செய்துகொள்வ தாகக் கண்டிப்பாய் கூறிவிட்டான். இனி மறுக்கமாட்டான். எத்த னையோ உண்மையாக இருக்கிறுன். எத்தனையோ ப்ரீதியாக விருக் கிறுன் என்றெல்லாம் கூறினுயே: இப்போது அவைகளெல்லாம் எங்கே போயிற்று. கல்யாணம் ஆகாமையினு லல்லவா மோசம் செய்துவிட்டுப் படுபாவி மறைந்தான். கல்யாணம் ஆயிருக்குமாயின் அப்பாவி மோசம் செய்தாலும், மற்ற என்ன செய்தாலும் நமக்கு இத்தகைய அவமான மில்லுயல்லவா? வெளியில் தலை காட்ட நாம் அஞ்சவேண்டாமல்லவா: தாராளமாகக் குழந்தையைப் பெற்றெடுத் துக்கொள்ளலாமல்லவா! "பாவி கட்டிய மனைவியை மோசம் செய் தான்'' என்று அவனை மட்டும் உலகம் திட்டும்; தூற்றும். இப் போது உன்னையும் சேர்த்தல்லவா தூற்றும். இதை யறிய வேண் டாமா! உம். இனி எதைக் கூறித்தான் என்ன செய்துதான் என்ன பலன்?'' என்று கதறி ஆத்திரமாகக் கூறினுள்.

பிறகு என்ன செய்ய முடியும். அறியாச் சிறுமியாதலால் இந் தக் கருப்ப நோயை ஆரம்பத்தில் தெரிந்து கொள்ளச் சக்தியற்று விட்டது. மாதமோ அதிகம் ஆய்விட்டது. இச் செய்தியை எத்

தனை தான் மூடுமந்திரமாக வைத்தாலும் அதை அடியோடு மறைக்க எப்படித்தான் முடியும். இவளோ பரம ஏழை. குடி இருக்கும் வீட்டிலோ இன்னும் நாலைந்துபேர் குடி இருக்கிறார்கள். வீட்டிற் குள்ளேயே இருப்பதால் அவர்களுக்கு எப்படித் தெரியாமலிருக்க முடியும். குசு குசு வென்று பேசிக் கொள்வதும் வெளியில் மெல்ல ரகஸியமாகப் பேசிக் கொள்வதுமாகப் பரவிவிட்டது.

காற்று போலாகிச் செய்தி வெகுவாய்ப் பரவி விட்டதால் விசாலாக்ஷி வேலைக்குப் போகும் போது, வரும் போதெல்லாம் அவளைப் பார்த்தால் பெண் பிள்ளைகள் குசு குசு வென்று கொழுத்துப் போய் பேசுவார்கள். இன்னும் சில வாயாடி வம்பிகள் வேண்டு மென்றே "என்ன விசாலம்! ஒங்க பெண்ணை வெளியிலேயே காணவில்லையே! என்ன உடம்பு சரியில்லையா! அந்த வாத்தியாரையுங் காணுமே, என் படிப்பை நிறுத்தி விட்டாளா"? என்று வாயைக் கிளறுவார்கள். இதொரு கிண்டல் தமாஷாம்.

இத்தகைய கொழுப்புப் பிடித்த சில வாயாடி வம்பிகளின் திமிர் பிடித்த செய்கையினால் தான் "பெண்களே வாயாடிகள். அண்டைவீட்டு அயல் வீட்டுச் செய்திகளைப்பற்றி வம்பு பேசிக் குடிகலைப்பது தான்பெண்களுக்கு வழக்கம்," என்று சில ஆண்கள் கூறவும், அந்த விகாரமான பெயரே வழங்கி விருத்தியாகவும் ஏதுவாகி விடுகிறது. இத்தகைய கொழுத்த வம்புக்கு வலுவில் போகா விட்டால் இவர்களின் தலை வெடித்தா போய்விடும்? வீட்டு வேலைகளையும் கெடுத்துக் கொண்டு, 'அப்பா! அவளா! பெரிய வாயாடி. வம்பி, பஜாரி,என்கிற பெரும் அவமானகரமான பெயரையும் எடுத்து புருடர்களெல்லாம் பரிகஸிக்கவும், "அதோ வம்பி போகிறாள்; வம்பியின் வீடு; வம்பியின் மக்கள்." என்று அக்கம் பக்கம் உள்ளோர் கேலி செய்து நகைக்கவும் வைத்துக் கொள்கிறார்கள். இந்த வம்பளக்கும் நேரத்தை நல்ல காரியத்தில், சத் விஷயத்தில், நல்ல தொழிலில், உயர்ந்த முறையில் செலவழித்தால் எல்லோருக்கும் எத்தனை உபயோகமாகவிருக்கும்?

நல்ல கிரந்தங்களைப் படிக்கக் கூடாதா! உயரிய நீதிகளைப் போதித்து உலகானுபவத்தை விளக்கிக் காட்டி புத்தி புகட்டும் போதகாசிரியர்கள் போன்றுள்ள அரிய சிறந்த நாவல்களைப் படித்து மகிழ்ந்து விருத்தியடைய லாகாதா! மக்களுக்கு வேண்டிய சட்டைகள், நிஜார்கள் பாவாடை சொக்காய்கள் முதலியன அழகாக வெட்டித் தைத்துக் கொண்டால் தன் பொழுதும் நல்ல வழியில்

பயன் பட்டதாகும், தன் குடும்பச்செலவிலும் சிக்கனம் செய்ததாகும். தனக்கு இத்தொழிலும் வரும் என்ற பெருமையை அடைவதாகும். துணிகளைப் பாழ் படுத்தாது கத்தரித்து அளவு படி ஒழுங்காகவும் தன்னிஷ்டமான மாதிரிகளிலும் தைத்ததாகும்.

தம் வீட்டு வாசற்படிகளை யலங்கரிக்கும் மணிக்கோர்வைகள் தோரணங்கள் தினுசு தினுசாகக் கட்டலாகாதா! பூவேலைகள் செய்ய லாகாதா! ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் சக்ராயுதத்திற்கு ஒப்பான ராட்டினத்தில் நூல் நூற்று ஏழைகளின் வறுமைப் பிணியைப் போக்கியும் நம் தேசமாதாவின் விடுதலைக்கும் உதவி செய்ததான பெருமை பெறலாகாதா! கிரகிக்கும் சக்தியும் பிறருக்குப் போதிக் கும் சக்தியும் இருந்தால் அனேக விஷயங்களைத் தெரிந்து கொண்டு கும்பு கூடிய சமயத்தில் இவ்வரிய விஷயங்களைப் பேசலாகாதா! அல்லது சிறு விஷயங்களை அழகாகக் கோர்வையாக ;வியாசங்களா கவோ, சிறு கதைகளாகவோ, நாடகங்களாகவோ எழுதி உபயோ கப் படுத்தலாகாதா! சத் விஷயமாகப் பொழுதைச் செலுத்த வேண்டு மாயின் எத்தனை மார்க்கங்களில்லை. சங்கீதம் ஒன்றே போதாதா! இத்தனை அற்புதமான வழிகளை யறியச் சக்தியின்றியும், ச்ரத்தை யின்றியும் விலக்கிவிட்டு, வம்புக் கென்றே நாக்கை நீட்டிக்கொண் அலையும் பெண் பேய்கள் எத்தனை உலாவுகின்றன! வெட்கம்! வெட்கம்!! இவ் வம்பு என்று மறைகின்றதோ, அன்றுதான் நமது அடிமையும்,மடமையும் உடனே மறைந்து விட வழியேற்படும்.

விசாலாக்ஷி என்ன பதில் கூறுவாள் பாவம்! விதியை எண்ணி விசனித்தபடியே "உடம்பு தான் சரியில்லை" என்று கூறிப் போய் விடுவாள். தினே தினே இந்த வம்பு தெருவில் அதிகரித்து விட் டது. இவள் குடி இருந்த வீட்டுக்காரிக்கு இது தெரிந்து, அந்த அம்மாள் விசாலத்தை நோக்கி "அம்மா! நீ நல்லவள். யோக்கியமான வள் ஏழை, என்று உனக்கு குறைந்த வாடகைக்கு விட்டிருந்தேன். உன் மகளுடைய குட்டு வெளியாகி விட்டது. நான் குழந்தையுங் குட்டியுமான பெரிய சம்சாரி. என் வாழ்வுக்குப் பங்கம் நேருவது சரியல்ல. இத்தகைய அக்கிரமத்தை என் வீட்டில் நடக்க யார்தான் சம்மதிக்க முடியும். சிசுஹத்திக்கு இது கொலைக்களமல்ல. நீ இந்த நிமிடம் முதல் 24 மணி நேரத்தில் வீட்டை விட்டுப் போகாவிட் டால் போலீஸாரைக் கூப்பிட்டு நீங்கள் செய்ய விருக்கும் கொலை யைத் தெரிவித்து விடுவேன். தாயும் மகளும் என்ன கதி யாவீர் களோ தெரியாது. இந்த வம்பு சனி எல்லாம் நமக்கு வேண்டாம். நீ உடனே சட்டியைத் தூக்கு. என் மக்களுக்கு இந்த ஊழல் தெரிந்தால் நீயும் உடந்தையாயிருந்தாய் என்று வசை கூறிக் கட்டுப்

போடுவார்கள். உனக்குப் புண்ணியமுண்டு. உடனே காலி செய்து விடு,'' என்று பெரியதோர் கண்டிப்பான உத்திரவு போட்டு விட்டாள்.

அந்தோ! பரிதாபம்! இக்கடுமொழியாம் சுடுசரத்தைக் கேட்டு சிடு சிடுத்து, நடு நடுங்கி, தேகம் பட படத்து விட்ட விசாலம் அதற்குமேல் எவ்விதம் தான் பதில் கூற முடியும்? என்ன பதில் தான் சொல்வது? காமுவும் இந்த வார்த்தையைக் கேட்டு அப்படியே இடிந்து போய் முக்கால் பங்கு உயிரும் போய்விட்ட சவம் போலாய் விட்டாள். தாயும் மகளும் தத்தளித்துத் தவிக்கிறார்கள். தாங்கள் இன்னிலைமையில் எங்கே செல்வது? எங்கு சென்றால் யார் ஆதரவு கொடுப்பார்கள், என்று அபாரமாக வருந்திக் கொண்டிருக்கிற சமயத்தில் ஒருநாளுமின்றித் திருநாளைப் போலும் புண்ணில் கோலிடுவது போலும், பேயிக்கு நடுங்கும் போது பிரம ராக்ஷஸ் ப்ரதயக்ஷமானது போலும், விசாலாக்ஷியின் பந்துக்களில் ஒரு அம்மாளும், ஐயாவும் இதுவரையில் கொண்டாடாத உறவு கொண்டாடிக் கொண்டு வந்து, "விசாலம்! அம்மா! காமு! என் செல்வமே! வா அம்மா! என்னமோ, மனிதர்களுக்கு எத்தனையோ கஷ்டங்கள் குடும்பத்தில் இத்தனை நாளாகப் பார்க்க முடியாமலேயே போய் விட்டது. இப்போது யாத்திரை சென்று திரும்பி வருகையில் பார்த்தஸாரதியைச் சேவிக்க வேண்டி சென்னைக்கு வந்தோம். அங்கிருந்து ஊருக்குப் போகும் வழியாயிற்றே என்று உங்களைப் பார்க்க வந்தோம். தட்டு கொண்டு வாம்மா! இந்த வெத்திலை பாக்கை வாங்கி கொள்ளும்மா''! என்று உருக்கமாகக் கூறினார்கள்.

அந்தோ! இடியின்மேல் இடி இடித்த மாதிரியான நிலைமையில் நீரில்லாப் பயிர்கள் போலும், நிலையில்லாக் கப்பல் போலும் தவித்திருக்கும் தருணத்தில் சோதனையிலும் சோதனையாக வந்துள்ள இப் பந்துக்களின் வருகை இவர்களுக்கு எப்படித்தான் இருக்கும் என்று கூற:வேண்டுமா! எரிமலையே தங்கள் மீது விழுந்து விட்டது போலான அபாரமான வேதனையை யடைந்து கல்லாய்ச் சமைந்து விட்டார்கள். சோதனைக் காலம் வரின் ஒன்றன் மேல் ஒன்றாக இவ்விதந்தான் வரும் போலும்! ஈச்வரோ ரக்ஷது.

# உங்களுடைய கவனத்தைக் கவரக் கூடியவை

# ?

பொங்கும்
காதல் என்பது என்ன,
யாருக்கு, எவ்வாறு உதித்து, வளரப்
போகிறது ? அனாதையான பாரதியின் நிலைமையும்
அவளுடைய பிற்கால வாழ்க்கையின் விவரங்களு மென்ன ?
மாசிலாமணியின் முடிவு எப்படியாயிற்று? ராஜசேகரனின் வீர தீர
பராக்கிரமமும் கருணையுங் கொண்ட அற்புதமான செய்கைகள்
யாவை? ஏழைப் பெண்கள் ஆசிரமத்தின் வாழ்க்கையின் தத்துவங்கள்
யாவை? அபலையான காமுவின் கதி யாதாயிற்று? அவளு
டைய எதிர்கால வாழ்க்கையின் விநோதங்களென்ன?
பொன்னுசாமியின் முடிவு என்ன? பெண் பிரே
தத்தின் ரகஸிய மெப்படி? கொலையின் மர்ம
மென்ன? சிறைவாசத்தின் அனுபவங்கள்
என்ன ? துப்பு அறியும் தூய வழிகள்
யாவை? நாயுடுவும் அம்புஜ
மும் எவ்வாறு கைதி
யானார்கள் ?

| நவரஸங்கள் ததும்பும் நவீனம் இதுவே |
|---|

| மாதம் இரண்டணா வருஷ சந்தா ரூ. 1–8–0. |
|---|

அவர்கள் கதி என்ன
வாயிற்று? ஜெயில் அதிகா
ரங்களும், போலீஸ் தடபுடல்
அட்டகாஸங்களும், கோர்ட்டு நட
வடிக்கைகளும், பேதைப் பெண்க
ளின் கலங்கிய நிலையும், பயங்கரச்
செய்கைகளின் விபரீதமும், லஞ்சக் கடவு
ளின் கொஞ்சும் தாண்டவமும், துஷ்டர்க
ளின் துணிந்த செய்கைகளும் இன்னும் இது
போன்ற பல அதிசய, விநோத, விசித்திர, பயங்கர,
திடுக்கிடும் சம்பவங்களும் இக் கதையில் நிறைந்துளதை அடுத்து
வரும் இதழ்களில் காணவும். இந்த அனுபவக் களஞ்சியத்தைப்
படிக்கத் தவறாதீர்கள். முந்துங்கள்.

**முன் பணம் அனுப்பும்போது தயவு செய்து உங்களது சந்தா நம்பரை மறக்காமல் எழுதுங்கள்.**

ஸ்ரீமதி

# வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்.

24 ரூபாய்க்கு
25 நாவல்கள்.

"ஜகன்மோகினி"
சந்தாதாரர்களுக்கு
குறைந்த விலை

| | ரூ. | அ. | பை. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| ராதாமணி (2 பாகங்கள்) | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| சாருலோசனு (2-பாகங்கள்) | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| ருக்மிணிகாந்தன் | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| சாமளநாதன் | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| தியாகக்கொடி | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 0 | ... | 1 | 8 | 0 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 0 | ... | 1 | 8 | 0 |
| ஸாரமதி | 1 | 12 | 0 | ... | 1 | 8 | 0 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 0 | ... | 1 | 4 | 0 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 0 | ... | 1 | 0 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 0 | ... | 1 | 0 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | ... | 0 | 14 | 0 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | ... | 0 | 14 | 0 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | ... | 0 | 12 | 0 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | ... | 0 | 12 | 0 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| பக்ஷிமாலிகா | 0 | 6 | 0 | ... | | ... | |
| ஜெயஸஞ்சீவி | 0 | 4 | 0 | ... | | ... | |

ரூ. 24/-முன்பண மனுப்புவோருக்கு 25 நாவல்களும் தபால் செலவின்றி அனுப்பப்படும்.

ரூ. 5/-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபால் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# தி யுனைடெட் இந்தியா

## லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: மதராஸ்)  (1906-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி—சென்னை அபீஷியல் டிரஸ்டி.

**2½ கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள்.**
**60 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.**
**14 லக்ஷத்திற்கும் மேலாகவே வருட வருமானம்.**

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில:—

இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையி லிருக்கிறது.

இது ஜரூராகவும், பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.

இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.

மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.

பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்.
செம்புதாஸ் தெரு, சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

வெளியாகிவிட்டது

1935 1935

# "ஸ்ரீ வித்யா"

ஜெம், ஜென்ட்ஸ், பாக்கெட்,

பிஸினஸ், பாபுலர் &

அபீஷியல்

# டைரிகள்

தென்னிந்தியாவில் எல்லோராலும்

மதிக்கப்பெற்றவை.

பப்ளிஷர்ஸ் :—

ஸ்ரீ வித்யா பிரஸ்,

கும்பகோணம்.

## ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இதர சஞ்சிகைகளைப் போல நாமும் ஜீவிய சந்தா ஏற்படுத்த வேண்டுமென்று அநேகர் கோருவதால், ரூ. 25/- முன்பணமனுப்புகிறவர்களை நமது ஜீவிய சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்வதுடன் இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களையும் இனாமாக அனுப்புவோம்.

---

வேலூர்—காட்டுப்பாடி சமீபம்—தாங்கயநல்லூர்
ஸ்ரீ சுந்தர வரதராஜப் பெருமாள்
அமாவாஸை உத்ஸவக் காக்ஷி
(வரப்பிரஸாத முள்ளது.)



க்ஷீண தசையிலிருந்தது, ஸ்ரீமான் V. ரங்கஸ்வாமி அய்யங்காரின் நன் முயற்சியாலும், பக்த கோடிகளின் பேருதவியாலும் நல்ல ஸ்திதிக்கு வந்துகொண்டிருக்கிறது.

ஆஸ்திகர்கள் எல்லோரும் ஆதரிக்கவும்.

Jaganmohini (Jany. 1935) Regd. No. M. 2210

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.




மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

## அமிர்தாஞ்சன் டிபோ.,

சென்னை கல்கத்தா

பம்பாய்.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS